சூன் - 2014

திருவள்ளுவர் ஆண்டு 2045

# செந்தமிழ்


தொகுதி : 58
பகுதி : 8

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



புதிதாகப் பதவியேற்ற வணக்கத்திற்குரிய மதுரை மாநகரத் துணைமேயர் திருமிகு. கு. திரவியம் அவர்களைப் பாராட்டி 31.05.2014 அன்று செந்தமிழ்க் கல்லூரிச் செயலர் திருமிகு. கோச்சடை இரா. குருசாமி அவர்களும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செயலர் திருமிகு. இரா. அழகுமலை அவர்களும் நேரில் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 58

பகுதி : 8

சூன் : 2014

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2045




வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 6,000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 10,000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


ஆசிரியர்

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,மதுரை.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| நனைகவுள் | புலவர் ஆறுவிரல் ஐம்பொறி | 4 |
| தமிழ்நாட்டுக் கோயில் வரலாறும் வழிபாட்டு முறையும் | முனைவர் அ. ஐம்புலிங்கம் | 6 |
| இணைவோம்.... நனைவோம்.... தமிழ் இணைய தளங்களில் | சீ. குறிஞ்சிச் செல்வன் | 12 |
| சூர்யகாந்தன் படைப்புகளில் உத்திகள் | மொ. தங்கவேல் | 14 |
| பன்னிரண்டாம் திருமுறை காட்டும் திருத்தொண்டு | முனைவர் மா. செல்வத்தரசி | 20 |
| பொருளதிகார நோக்கில் இளம்பூரணரின் உரைச்சிறப்புகள் | க. செல்வி | 30 |
| தமிழரின் மறுமைக் கோட்பாடு | புலவர் து. குருசாமி தேசிகர் | 35 |

# இதழ் மணம்

பேரன்புடையீர்!

வணக்கம். தமிழ் இலக்கியம், இலக்கணம் மற்றும் பண்பாட்டுச் சிறப்புக்களை எடுத்துரைக்கின்ற கட்டுரைகளைக் கொண்டதாக இம்மாத இதழ் அமைந்துள்ளது.

தமிழ் இலக்கியச் சொற்கள் பொருளாழம் மிக்கவை. அத்தகு சொற்களுள் ஒன்றாகிய, வள்ளுவர் பயன்படுத்தியுள்ள நனைகவுள் என்ற சொல்லின் பொருளைப் புலவர் ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் நுணுகி ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ள பாங்கு பாராட்டுதலுக்குரியது.

உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்து வரும் தமிழர்களை இணைக்கின்ற பாலமாகத் தமிழ் இணைய தளங்கள் விளங்குவதை அறிமுக நோக்கில் திரு. சீ. குறிஞ்சிச்செல்வன் கட்டுரைத்துள்ளார்.

படைப்பாளர் சூர்யகாந்தன், தன் நாவலில் பயன்படுத்தியுள்ள ஏழுவகை உத்திகளைக் கட்டுரையாளர் திரு. மொ. தங்கவேல் அவர்கள் தக்க சான்றுகளுடன் விளக்கியுரைத்துள்ளார்.

இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற பன்னிரு ஆழ்வார்களின் இறைப்பற்றையும், தொண்டுள்ளத்தையும் முனைவர் மா. செல்வத்தரசி அவர்கள் சிறப்புற புலப்படுத்தியுள்ளார்.

இலக்கிய, இலக்கணச் சிறப்புக்களை மிகச் சீரிய முறையில் எடுத்துரைப்பவர்கள் உரையாசிரியர்களே. அவர்களுள் குறிப்பிடத்தகுந்த இலக்கண உரைகாரர் ஆகிய இளம்பூரணரின் உரைச்சிறப்புகளை முனைவர் பட்ட ஆய்வாளர் க. செல்வி அவர்கள் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்.

தமிழரின் சிவநெறிக்கு அரண் செய்கின்ற மூன்றாவது கோட்பாடு என்னும் கட்டுரையினை விளக்கம் செய்கின்ற வகையில் புலவர் குருசாமி தேசிகர் அவர்கள் தமிழரின் மறுமைக் கோட்பாடு என்னும் கட்டுரையை வழங்கியுள்ளமை சிறப்பிற்குரியது.

தமிழ்மொழியின் பன்முகச் சிறப்புக்களை வெளிக்காட்டுகின்ற வகையில் இம்மாத இதழ் அமைந்து, சிறப்புடன் வெளிவருவதில் மகிழ்வு கொள்கின்றோம்.

**- ஆசிரியர் -**

# நனைகவுள்

புலவர் **ஆறுவிரல் ஐம்பொறி**
வீரசோழபுரம்

ஒரு படைப்பின் வெற்றிக்குச் சிகரமாக அமைவது சொல்லாட்சித் திறனே. உரிய சொல்லை உரிய இடத்தில் சிந்தித்து அமைப்பதே சொல்லாட்சித் திறனாம். ஒரு படைப்பில் ஓரிடத்தில் ஒரு சொல்லை ஓராண்டுக்குச் சிந்தித்து அமைத்தால் அச்சொல் எத்துணை வலுவுள்ளதாக அமையும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். திருவள்ளுவர் பயன்படுத்திய அனைத்துச் சொற்களும் சிந்தித்துச் சிந்தித்து அமைத்த சொற்களே. நனைகவுள் என்ற சொல்லும் திருவள்ளுவரின் ஆழ்ந்த சிந்தனையில் தோன்றிய சொல்லே. இச்சொல் மிக அற்புதமான படைப்பாகும். இச்சொல்லை இவர் ஒரு குறட்பாவில் மட்டுமே பயன்படுத்தியுள்ளார். அக்குறட்பாவைக் காண்போம்.

**வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்**
**யானையால் யானையாத் தற்று.** - குறள். 678

இக்குறட்பாவிலுள்ள நனைகவுள் என்ற சீர் யானைக்கு அடைமொழியாக (நனைகவுள் யானை) வந்த சீர் என்பதை எளிதில் அறியலாம். யானைக்கு அடைமொழி கூற பல எளிய சீர்கள் உள்ளபோது நனைகவுள் என்ற அரிய சீரை ஏன் கூறவேண்டும்? சிந்திப்போம்.

இக்குறட்பாவில் முன்னுள்ள சீர் கோடல் (தேமா) என்பதாலும் பின்னுள்ள சீர் யானை (தேமா) என்பதாலும் இடையிலுள்ள சீர் நிரை நிரையாக (கருவிளம் ஆக) அமைய வேண்டும் என்பது உறுதியாகிறது. நனைகவுள் என்ற சீர் நிரை நிரையே. இது மட்டுமா காரணம்? சிந்திப்போம்.

கவுள் என்ற சொல்லுக்குப் பொருள், யானையின் கன்னத்திற்கு நேர் உள்ளே உள்ள யானையின் உள்வாய் ஆகும். ஒரு யானைக்கு இப்பகுதி வலப்பக்கம் ஒன்றும், இடப்பக்கம் ஒன்றுமாக இரண்டு உள்ளன. இவ்விரண்டிலும் நீர் சுரந்து கொண்டேயிருக்கும். இந்நீரை மதநீர் என்பர். இவ்விரு பகுதிகளும் எப்போதும் ஈரமானதாகவே இருக்கும். அதனால் **'கவுள்'** என்ற சொல்லுக்கு **'நனை'** என்ற அடைமொழி கொடுத்து **'நனைகவுள்'** என்றார்.

நமக்கு உள்வாயில் வலப்பக்கம் ஓர் உமிழ்நீர் சுரப்பியும் இடப்பக்கம் ஓர் உமிழ்நீர் சுரப்பியும் உள்ளன. அதனால்தான் நமது உள்வாய்

எப்பொழுதும் ஈரமுள்ளதாக இருக்கிறது. நனை என்ற அடைமொழி கொடுத்து நமது உள்வாயை நனைவாய் என்று கூறலாம். இதுபோல எப்போதும் ஈரமுள்ளதாக இருக்கும் யானையின் உள்வாயை நனைகவுள் என்று கூறலாம். இவ்வரிய சீர் அமைந்துள்ள சில இலக்கியங்களைக் காண்போம்.

1. நெடுநிலை யாஅ மொற்றி நனைகவுட்
படிஞி மிறு காயுங்களிறே. அகநானூறு - 59

2. தேமுசு நனைகவுட் டிசைகாவல் கொளற்கொத்த...
கலித்தொகை குறிஞ்சிக்கலி : 48-2

3. ........................................ நனைகவுள்
காய்சினஞ் சிறந்த வாய்புகு கடாத்தொடு. அகநானூறு - 227

இவ்வரிய சீருக்கு நாமக்கல் கவிஞர் அவர்களும் பவானிதாசன் அவர்களும் பழகின யானை என்று பொருள் கூறியுள்ளனர். பரிமேலழகர் நனைந்த கபோலத்தினையுடைய யானை என்று பொருள் கூறியுள்ளார்.

இக்குறட்பாவில் வினையால் வினையாக்கிக் கோடல் என்பது பொருள். நம்மிடையே செய்ய வேண்டிய செயல் ஒன்று உள்ளது. அச்செயலைக் கொண்டு இன்னொரு செயலைச் செய்து கொள்ளுதல், இப்பொருளில் இரண்டு செயல்கள் காட்டப்பட்டுள்ளன. யானையால் யானை யாத்தது என்பது உவமை. நம்மிடையே உள்ளது ஒரு யானை, அந்த யானையைக் கொண்டு இன்னொரு யானையைக் கட்டுதல். இவ்வுவமையில் இரண்டு யானைகள் காட்டப்பட்டுள்ளன.

பொருளில் **இரண்டு செயல்களையும்** உவமையில் **இரண்டு யானைகளையும்** காட்டிய பொய்யா மொழி உவமையின் (யானையின்) அடைமொழியிலும் இரண்டு அமைய வேண்டும் என்று சிந்தித்தார். சிந்தனையில் நனைகவுள் என்ற சீர் தோன்றியது. ஒரு யானைக்கு **இரண்டு நனைகவுள்கள்** உள்ளன என்பது திருவள்ளுவர் அறிந்ததே. நனைகவுள் நிரை நிரையாக இருப்பதையும் அவர் அறிந்தார், மகிழ்ந்தார். நனைகவுளை யானைக்கு அடைமொழி ஆக்கினார்.

பொருளுக்கேற்ற உவமை கூறவேண்டும் என்பதே இலக்கணம். உவமைக்குக் கூறும் அடைமொழியும் பொருத்தமாக அமைய வேண்டும் என்று சிந்தித்து சீரமைத்த வள்ளுவரின் சொல்லாட்சித் திறனை உன்னும்போதெல்லாம் வியப்பினால் கண்கள் விரிகின்றன. புருவங்கள் உயர்கின்றன. மனம் மகிழ்கிறது.

# தமிழ்நாட்டுக் கோயில் வரலாறும் வழிபாட்டு முறையும்

முனைவர் அ. ஜம்புலிங்கம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

உலகத்திலேயே மிக உயர்ந்த பண்பாடும் சிறந்த நாகரிகமும் கொண்ட தமிழகத்தில் 'கோயில் நாகரிகம்' என்பது ஒரு தனித் தன்மையுடன் வளர்ந்து கொண்டிருக்கின்ற ஒரு துறையாகும். 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என உலகநீதி வழங்கிய உலகநாதர் கூறுவதாலும், திருக்கோயில்லாத் திருவிலூரும் என நாவுக்கரசர் நவில்வதாலும் கோயிலைத் தமிழர்கள் தம் வாழ்க்கையுடன் இணைத்துக் கொண்டார்கள் என்பது பெறப்படும்.

திருக்கோயில்கள் அனைத்தும் சமய அடிப்படையிலும், தத்துவ அடிப்படையிலும் உருவாக்கப் பெற்றவை ஆகும். அவை ஓவியம், சிற்பம், கட்டடக்கலை, இசை, நடனம், நாடகம் முதலிய நுண்கலைகளை உருவாக்கும் பொது இடங்களாகப் போற்றப்பெற்றன. சமயமும் சமுதாயமும் கொண்ட பாசப்பிணைப்பினால் கோயிலைத் தழுவிய குடிகளும், குடிகளைத் தழுவிய கோயிலுமாகச் சிறப்புற்றனர். எனவே தமிழகச் சமய சமுதாய வரலாற்றில் திருக்கோயில்களின் வளர்ச்சி நிலை ஒரு குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பெற்றது.

'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என்று ஔவையார் கூறும் திருவாக்கால், கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபடுவது மிகவும் நல்லது என்பதனை உணர்ந்தனர். பண்டு தொட்டே தமிழ்ச் சான்றோர்கள் தத்தம் ஊரில் ஆலயம் அமைத்து வழிபடுவதை அத்துணை அவசியமாகக் கருதி வந்தனர். அதனால் தான் திருநீறு அணியாத நெற்றியைச் சுடு என்றும், சிவாலயம் இல்லாத ஊரைக் கொளுத்து என்றும் கூறினார்கள் போலும்.

தமிழ்நாட்டின் கட்டடக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றின் மேன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்வன நம் தெய்வத் திருக்கோயில்களே ஆகும். சங்ககாலம் தொட்டே கோயில்கள், தமிழகத்தில் சிறப்பிடம் பெற்று வந்திருக்கின்றன. அரசன் தங்கி இருக்கும் அரண்மனையையும் கோயில் என்று குறிப்பிட்டு வழங்கி வருவதால் இறைவனது ஆலயமும் மன்னன் மாளிகை போலவே விரிந்தும் பரந்தும் அமைந்திருந்திருக்கின்றது. அரசன் அரண்மனைகளும், ஆண்டவன் ஆலயங்களும் ஆகமநூல் வல்ல சிற்பிகளாலும், சோதிடர்களாலும், நாள் பார்த்து, நாழிகை பார்த்து, நூல் முறைப்படி உருவாக்கப்பட்டன என்பதைச் சிலப்பதிகாரம், நெடுநல்வாடை, பெரும்பாணாற்றுப்படை போன்ற பழந்தமிழ் இலக்கியங்களால் அறியலாம்.

வரலாற்று அடிப்படையில் ஆராயும் பொழுது தமிழகத்தை ஆண்ட பெருநில மன்னர்களும் குறுநில சிற்றரசர்களும் செல்வந்தர்களும் அழகு கலைகளையும், சிற்பங்களையும், ஓவியங்களையும் வளர்க்கும் பண்ணைகளாகிய கோயில்களைப் புராண ஆகம அடிப்படையில் தோற்றுவிப்பதில் பெரிதும் நாட்டங் கொண்டிருந்தனர் என்பது புலனாகின்றது.

தமிழகத்தில் என்று நடுகல் வழிபாடு தோன்றியதோ அப்பொழுதே உருவ வழிபாடும் தொடங்கப் பெற்றுவிட்டது என்று கருதலாம். சங்க காலந்தொட்டே கல், மண், சேறு முதலியவற்றாலான உருவங்களைப் படைத்து வழிபட்டு வந்த தமிழர்கள், தெய்வ உருவங்களை வைத்தும் வழிபட்டிருக்கின்றனர். அந்தணர்களின் இல்லங்களில் நன்கு குழைத்து மெழுகப்பட்ட அறைகளில் அவர்கள் வணங்கும் பொருட்டு வழிபடு தெய்வச் சிலைகளை வைத்திருந்தனர். இதனைப் பெரும்பாணாற்றுப்படை,

"பைஞ் சேறு மெழுகிய படிவ நன்னகர்"

என்ற அடியில் குறிப்பிடுகின்றது.

முற்காலத்தில் மண்ணால் வனைந்த சிலைகளை அனலில் பக்குவமாய்ச் சுட்டு சுடுமண் பாவைகளாக்கி நெடுங்காலமிருக்க வழிகோலினர். இன்றும் ஊர்களில் சிறு தெய்வங்கள் இவ்வாறு அமைந்துள்ளதைக் காணலாம்.

பழங்காலக் கோயில்கள் மரம், செங்கல், சாந்து ஆகியவற்றால் அமைந்தவை. அவற்றின் மேற்கூரைகள் ஓடு மற்றும் சுண்ணாம்பு சாந்தினால் வேயப்பட்டிருந்ததாகத் தெரிகிறது.

"சுடுமண் ஓங்கிய நெடு நகர் வரைப்பு"

என்று திருவெஃகாவில் உள்ள திருமால் கோயிலைப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை குறிப்பிட்டுள்ளது.

"பணியிய ரத்தை நின்குடையே முனிவர், முக்கட்
செல்வர் நகர் வலம் செயற்கே"

என்ற புறநானூற்று அடிகள் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் திருவெண் கொற்றக் குடை சிவபெருமானது பெரிய திருக்கோயிலை வலம் செய்வதற்கே தாழ்வது என்ற கருத்தைப் புலப்படுத்துகின்றன. அக்காலக் கோயில்கள் நகர் போல சிறப்பாகத் தோன்றின. நகர் போல் தோன்றுவதால் கோயிலை நகர் என்றனர்.

அரசன் வதியும் அரண்மனைகளை அமைக்கவும், தெய்வங்கள் உறையும் கோயில்களைக் கட்டவும் நூலறிபுலவர் என்று அழைக்கப்பட்ட கட்டடக்கலை அறிஞர்கள் இருந்தனர். அத்தகையோர் கட்டடங்களை

வடிவமைக்கும் போது நாள் குறித்து, திசைகளைப் பார்த்து அவற்றிற்கேற்ப தெய்வ உருவங்களை ஒப்ப நோக்கி அமைத்தனர். இதனை,

"நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும் பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து"

என்ற நெடுநல்வாடை பாடல் அடிகள் புலப்படுத்துகின்றன.

காவிரிப்பூம்பட்டினத்தில் இன்னின்ன கோயில்களில் இன்னின்ன திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றன என்று கூறத் தொடங்கிய இளங்கோவடிகள்,

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
ஆறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வாள்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்"

என்றிவ்வாறு வரிசைப்படுத்தி முறையே சிவபெருமானுக்கும் முருகருக்கும், பலராமருக்கும், திருமாலுக்கும், இந்திரனுக்கும் கோயில்கள் அமைந்திருப்பதைப் புலப்படுத்தியுள்ளார்.

சிலப்பதிகாரத்தில் நடுகற்காதையில் கூறப்படும் பத்தினிக்கோட்டம், அங்கு அமைக்கப்பட்டிருந்ததை,

"மேலோர் விழையும் நூல்நெறி மாக்கள்
பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டம்"

என்ற அடிகளால் இளங்கோவடிகள் தெரிவிக்கின்றார்.

தெய்வச் சிலை வடிவில் உள்ள கண்ணகியையும், கோவலனையும் காணக் கண்ணகிக் கோட்டத்திற்கு மணிமேகலை ஆவலுடன் வருகின்றாள். இதனைச் சீத்தலைச்சாத்தனார்,

"தணியாக் காதல் தாய்கண் ணகியையும்
கொடைகெழு தாதை கோவலன் தன்னையும்
கடவுள் எழுதிய படிமங் காணிய
வேட்கை துரப்பக் கோட்டம் புகுந்து"

என்ற அடிகளால் அறிவுறுத்துகின்றார்.

பூம்புகாரில் சுட்ட செங்கற்களினாலாகிய நெடிதுயர்ந்த மனைகளிலே சுதையினால் செய்யப்பட்ட சிற்பங்களைக் கண்டு வேற்று நாட்டவரும் வியந்தனர் என்பதனை,

"வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியங் கண்டு நிற்குநரும்
.................................

"வெள்ளி வெண்சுதை இழுகிய மாடத்து
உள்ளுர எழுத வெள்ளிடை வாயினும்"

என்ற அடிகளில் மணிமேகலை குறிப்பிடுகின்றது.

மணிமேகலை காலத்தில் பூதங்களுக்கும், கடவுளர்க்கும் பலவாகக் கோயில்கள் கட்டப்பட்டிருந்தன. மண், மரம், செங்கல், சுண்ணாம்பு முதலியவற்றால் அவை கட்டப்பட்டிருந்தன. இதனைச் சீத்தலைச் சாத்தனார்.

"மடித்த செவ்வாய் கடுத்த நோக்கின்
தொடுத்த பாசத்துப் பிடித்த சூலத்து
நெடுநிலை மண்ணீடு நின்ற வாயிலும்
..................................................
காடமர் செல்வி கழிபெருங் கோட்டமும்
..............................................
குறியவும் நெடியவும் குன்று கண்டன்ன
சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டமும்"

என்ற அடிகளில் குறிப்பிடுகின்றார்.

மரத்தாலும், சுதையாலும், சுடுமண்ணாலும் உருவங்களைப் படைத்துக் களித்த மக்கள் அவற்றைப் பல்லாண்டு நிலைத்து நிற்கக் கூடிய வகையில் பாறைக் கற்களைக் கடைந்து தெய்வ உருவங்களைப் படைத்தனர். இப்பரிணாம வளர்ச்சியினை,

"மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும்
கண்ணிய தெய்வதம் காட்டுநர் வகுக்க
ஆங்கத் தெய்வதம் அவ்விட நீங்கா..."

என்ற கந்திற்பாவை வருவதுரைத்த காதையின் வாயிலாக மணிமேகலை கோடிட்டுக் காட்டுகின்றது.

சங்கம் மருவிய காப்பியக் காலத்தில் பல திருவுருவங்கள் அமைந்த கோட்டங்கள் இருந்தமை பற்றியும், பூதங்களுக்கும், கடவுளர்க்கும் கோயில்கள் இருந்தமை பற்றியும், கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் சிலை அமைத்துப் பத்தினிக் கோட்ட வழிபாடு நிகழ்த்தியமை பற்றியும் சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களின் வழி அறிந்து கொள்ளலாம்.

காலத்தால் அழியத்தக்க பொருள்களான மரம், செங்கல், சுண்ணாம்பு, சாந்து, சேறு ஆகியவற்றால் அமைந்த பழங்காலக் கோயில்கள் அனைத்தும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயின. அழியாத பரம்பொருளுக்கு அழியாத கோயில் எடுத்தவன் விசித்திர சித்தன் என்ற முதலாம் மகேந்திரவர்ம பல்லவனே. தமிழ்நாட்டின் பெருமைக்குக் கட்டியம் கூறும் கற்றளிகட்கு வித்திட்ட பெருமை இவனையே சாரும்.

கி.பி.ஏழாம் நூற்றாண்டிற்குப் பிறகு தான் கோயிற்கலை முறையாகவும் படிப்படியாகவும் வளர்ந்து வந்துள்ளது. பாறைகளைக் குடைந்து குகைக் கோயில்களை அமைத்தனர். பாறைகளைச் செதுக்கியும் கோயில்களை உருவாக்கினர். கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி அமைக்கும் கோயில்களும் வளர்ந்தன. கருங்கற்களை அடுக்கிக் கோயில் எழுப்பிய பிறகு சுற்றாலையும் சுற்றாலையில் சிறு சிறு கோயில்களும் அமைக்கப்பட்டன.

கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்குப் பின்னர் தான் கற்றளிகள் எழுந்தன. ஆனால் அதற்கும் முன்னரே உயர்ந்த மதில்களும், கோபுரங்களும், கோயில்களும், மண்டபங்களும் இருந்திருக்கின்றன. இதனை,

"பெருங்காறு சடைக் கணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதி னோடெட்டு மற்றுங்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற் கோயில்
கருப்பறியல் பொருப்பனைய கொகுடிக் கோயில்
இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்
இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
தாழ்ந் திறைஞ்சத் தீவினைகள் தீரும் அன்றே"

என்ற அப்பரின் திருத்தாண்டகப் பாடல்வழி அறியலாம்.

மலையைப் போலவும், மணியைக் கவிழ்த்து வைத்தது போலவும் கோயில்கள் இருந்திருக்கின்றன என்பது இதன்வழி புலனாகின்றது. மக்களை அறிவிலும், ஒழுக்கத்திலும், பண்பாட்டிலும் மேன்மையுறச் செய்வது திருக்கோயில் வழிபாடே ஆகும். ஊரானோர் தேவ குலம், கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், தெய்வத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம் என்றின்னோரன்னவை, நம் நாட்டில் கோயில்கள் பல்கியிருந்தமையைக் காட்டுவனவாம். இதனால் திருக்கோயில் வழிபாடு எவ்வளவு இன்றியமையாதது என்பதனை உணரலாம்.

*கோயிலில்லா ஊரும், ஆலய வழிபாடு நடவா ஊரும் ஊராகாது;* அவை மக்கள் வாழ்வதற்கு உரியது அல்லாது விலங்குகள் மட்டும் வாழும் காடாகும். இதனை,

"திருக்கோவில் இல்லாத திருவில் ஊரும்
திருவெண்ணீ றணியாத திருவில் ஊரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா ஊரும்
பாங்கினொடு பலதளிகள் இல்லா ஊரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்

அருப்போடு மலர் பறித்திட் டுண்ணா ஊரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவி காடே "
என்ற நாவுக்கரசரின் திருப்பாட்டால் அறியலாம்.

நாம் இறைவனை வணங்கி வழிபடுவது நமக்குப் பெரும்பயன் தருவதோடு, அவற்குத் திருக்கோயில்களும், திருவிழாக்களும் அமைத்து வணங்குதல் தான் சிறந்த முறை என்பதனை,

" குறிகளும் அடையாளமும் கோயிலும்
நெறிகளும் அவன்நின்றதோர் நேர்மையும்
அறியஆயிரம் ஆரணம் ஓதினும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே"

என்ற நாவுக்கரசரின் நல்வாக்கால் அறிந்தின்புறலாம்.

அறிவாலும், அன்பாலும் இறைவனை அடையலாம் என்பதனை,

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்
பொக்கம் மிக்கவர் பூவும் நீருங்கண்டு
நக்கு நிற்பன் அவர்தமைநாணியே"

என்ற அப்பரின் அனுபவமொழியால் தெளியலாம்.

இறைவன் அருளைப் பெறுவதற்கு மெய்யுணர்வும். அதன்வழித் தோன்றும் பேரன்பும் தான் இருபெருவாயில்களாக அமைந்துள்ளன. அளவு கடந்த மனவுறுதியும் கரை கடந்த பேரன்பும் தூய உள்ளமும் மெய் அறிவும் நிறைந்த ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் முதலான மேலோர் கோயில்கள் தோறும் சென்று சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நிலைகளில் இறைவனை வணங்கி வழிபட்டு வந்தனர்.

தமிழகக் கோயில்கள் இறைவழிபாட்டுக்கு மட்டும் தோன்றியவை என்று எண்ணக்கூடாது. இறைவழிபாட்டுக்கு மட்டும் தோன்றியவை என்றால் கருவறை ஒன்றே போதுமானது. பக்திக்கு உறைவிடமாக விளங்கிய கோயிலை மையமாக வைத்துத்தான் சமுதாயம் வளர்ந்தது. மக்களின் நாகரிகச் சின்னங்களைப் பறைசாற்றும் கலைக்கூடமாகத் திகழ்வது கோயில்கள்தான் என்றால் மிகையாகாது. கோயில்களில் நடைபெறும் விழாக்கள்தான் நாகரிகத்தையும் பண்பாட்டையும் வளர்க்கும் நாற்றாங்கால்களாக விளங்குகின்றன.

மனிதனது அறிவும் நாகரிகமும் வளர வளர அவற்றை ஒட்டிக் கோயில்களின் அமைப்பும் பண்பும் பயனும் வளர்ந்திருக்கின்றன. நமது பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் பெருமைசேர்க்கும் வகையில் அமைந்துள்ள கோயில்களைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நமது கடமைஆகும்.

# "இணைவோம்.... நனைவோம்... தமிழ் இணைய தளங்களில்"

திரு. சீ. குறிஞ்சிச் செல்வன்
ஸ்ரீரங்கம்

கண்டங்கள் தாண்டி வாழ்ந்தாலும் தமிழர்களை ஒன்றுபடுத்தும் பாலமாய்ச் செயலாற்றி வருபவை தமிழ் இணைய தளங்கள் ஆகும்.

1969ம் ஆண்டில் செயலாற்ற துவங்கிய அர்பா நெட் (Advanced Research Project Agency Net Work) எனப்படும் அமெரிக்க ராணுவத்தின் கணினி வழியிலாகிய தகவல் தொடர்பு கட்டமைப்பே இணையத்தின் முன்னோடியாய்த் திகழ்கிறது.

இக்கட்டமைப்பு படிப்படியாய் வளர்ச்சியுற்று பல்கலைக் கழகங்கள், அரசுத் துறைகள் என விரிவடைந்து 1999-இல் இணையம் எனத் தனித்து செயலாற்றத் தொடங்கியது.

இணையத்தில் பல மென்பொருட்கள் கிடைக்கின்றன. சில முற்றிலும் விலையின்றி அஃதாவது இலவசமாய் கிடைக்கின்றன. இவை இலவசப் பொருட்கள் எனப்படுகின்றன.

சிலவற்றைச் சில நாட்கள் பயன்பாடு கருதி இலவசமாய்ப் பயன்படுத்தலாம். அவை பகிர்வுப் பொருள் எனப்படும்:

''டெல்நெட்'' என்கிற கருவியின் உறுதுணையோடு இணையத்திலுள்ள வேறொரு கணினியுடன் தொடர்புற்று அதில் அமைந்துள்ள தகவல்களைப் பெற முடியும்.

## முதல் தமிழ் இணைய தளம்

உலகின் முதல் தமிழ் இணைய தளம் www.kanian.com ஆகும். சிங்கப்பூர் பல்கலைப் பேராசிரியர் நா. கோவிந்தசாமியால் இது உருப்பெற்றதாகும்.

தமிழர்களின் கருத்துக்குவியலாக அமைந்திருந்த இந்த இணையதளம் பேராசிரியர் நா.கோ.வின் மறைவிற்குப் பின்னால் தேக்கமடைந்து விட்டது.

## இணையம் என்னும் சொல்லுரு

இணையம் என்னும் சொல்லுருவைக் கண்டு பிடித்தது தமிழ்நெட்டாகும். இஃது ஆஸ்திரேலியாவிலுள்ள பாவா பிள்ளையின் இணையதளமாகும். (www.tamil.net)

தமிழ்சார் கருத்துகள், அறிவியல் விளக்கங்கள் ஆகியன இதில் தொகுக்கப் பெறுகின்றன. தமிழ் டாட் காம் இதன் இணைப்பமைப்பு ஆகும்.

## கணித் தமிழ்ச் சங்கம்

இரண்டாம் இணையத் தமிழ் மாநாட்டிற்குப் பின்னர் உருவாகிய அமைப்பே கணித் தமிழ்ச் சங்கம் (www.kanithamigh.org) ஆகும்.

அயல் தமிழர்களால் மட்டுமே இணையத் தமிழ் வளர்ச்சி பெற்று வருகிறது என்னும் கருத்தைத் தகர்க்கும் நோக்கில் இது அமையப் பெற்றதாகும்.

இது கணினித் தமிழ் மாநாடுகள் நடத்துவதோடு நில்லாமல் புதுப்புது மென்பொருட்களை வெளியிட்டு வருகிறது. அந்த மென்பொருட்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதியும் உள்ளது.

## முதல் தமிழ் மென்பொருள் அங்காடி

சென்னை சஃப்ட் வியூ கணினி நிறுவனத்தின் இணையதளம் இது. உலகிற் முதல் தமிழ் மென் பொருள் அங்காடி என இதனைக் கொள்ளலாம். தமிழ் எழுத்துருக்கள், சொற்செயலிகள், அகராதிகள், தமிழ் மின்னஞ்சல் முதலிய பகுதிகள் இதில் இடம் பெற்றுள்ளன.

## முடிவு

தமிழ் இணைய தளங்களின் பரப்பு பரந்துபட்டதாகும். (கட்டுரையின் எல்லை கருதி சில இணைய தளங்கள் மட்டுமேசுட்டிக் காட்டப்பட்டுள்ளன). தொழில் நுட்ப வளர்ச்சியாம் இணையத்தின் தமிழின் அளப்பரிய வீச்சைத் தொட்டுக் காட்டுவதே இக் கட்டுரையின் அடிப்படை நோக்கம் ஆகும்.

தேடுவோரின் தேடல்களில் பலபரிமாணங்கள் ஏற்படுவது நிச்சயம்.

# வாசகர் வாசகம் (1)

பெருந்தகையீர்,

வணக்கம். மே மாதம் 'செந்தமிழ்' இதழ் செழுந்தமிழ் இதழாக மலர்ந்து சிறக்கின்றது.

"பண்டைத் தமிழர்களின் அரண்கள்" என்ற கட்டுரை மிகவும் சிறப்பு. ஆய்வுக் கண்ணோட்டத்துடன் அமைந்தது. இதே போன்று கொன்றை மலர் பற்றிய கட்டுரையும் பாராட்டுக்குரியது.

உரையாசிரியர்களின் பணி எப்படிப்பட்ட சிறப்பிற்குரியது என்று துலக்கிக் காட்டுகிறது பெருமழைப்புலவரைக் குறித்த கட்டுரை வாழ்த்து.

**நெல்லை. ந. சொக்கலிங்கம்**

# சூர்யகாந்தன் படைப்புகளில் உத்திகள்

மொ. தங்கவேல்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

## முகவுரை

சமூக வாழ்க்கையில் காணக்கிடைக்கும் காட்சிகள், உணர்வுகள், இன்பதுன்பங்கள், போராட்டங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு புதினங்கள் கட்டமைக்கப்படுகின்றன. அதன் அடிப்படையில் உருவாகும் நாவல்கள் அனைத்தும் வெற்றி பெற நாவலாசிரியர் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் உத்திகளாகக் கைக்கொள்ளப்படுகின்றன. இத்தகைய உத்திகளை சூர்யகாந்தன் எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## உத்தி

படைப்பாளி தனது கருத்துக்களைத் தெளிவாக உணர்த்தும் வகையிலும், படிப்பவரின் உணர்வுகளைத் தூண்டும் வகையிலும் வகுத்துக் கொள்ளும் முறைகளே உத்திகள். படைப்பாளர்களின் உத்திகள் அவரவர் எண்ணத்தின் வடிவத்தை ஏற்று வெவ்வேறு விதத்தில் அமையலாம்.

இலக்கியத்துறையில் உத்தி என்பது ஒரு படைப்பாளன் தனது படைப்பின் மூலம் வாசகர் மனதைக் கவர மேற்கொள்ளும் திறமையைக் குறிக்கும். உத்தி என்ற சொல்லுக்கு சொல்லல் என்று தமிழ்மொழி அகராதி விளக்கம் தருகிறது. ஓர் ஆசிரியரால் பயன்படுத்தப்படும் இலக்கியக் கருவியே உத்தி என்று தமிழ்ச் சொற்களஞ்சியம் பொருள் உரைக்கின்றது.

உத்தியின் தன்மையைக் கொண்டு படைப்பாசிரியர்கள் தங்கள் படைப்புகளில் வேறுபடுகிறார்கள். பரவலாகப் பல நாவலாசிரியர்கள், ஆர்வமூட்டும் உத்தி, சொற்சுருக்க உத்தி, பாத்திரப்படைப்பு உத்தி மற்றும் மொழிநடைஉத்தி எனப் பலவகை உத்திகளைப் பயன்படுத்துகின்றனர்.

ஒரு கலைப்படைப்பை உருவாக்குவதற்குப் படைப்பாளர் மேற்கொள்ளும் நுண்ணிய அணுகுமுறை உத்தியாகும். படைப்பாளர் தான் சொல்லவரும் கருத்துக்களைக் கற்பவர் மனதில் எளிதில் பதியச் செய்யவும், விளங்க வைக்கவும் கையாளும் முறைகள் உத்தியாகும் என்ற இக்கருத்துக்கள் இரண்டும் உத்தியின் சிறப்பை விளக்குகின்றன. நாவலாசிரியரின் ஆற்றலுக்கேற்ப உத்திகள் பல வகைப்படும்.

1. கருத்துப் புலப்பாட்டு உத்தி
2. பாடல் உத்தி
3. எடுத்துரை உத்தி
4. வினா-விடை உத்தி
5. உரையாடல் உத்தி
6. குறியீட்டு உத்தி
7. பின்னோக்கு உத்தி ஆகியனவாகும்.

மேற்குறித்த சில உத்திகளைச் சூர்யகாந்தன் தன் நாவல்களில் பயன்படுத்தியுள்ள விதத்தை விளக்குவதாய் இக்கட்டுரை அமைகின்றது.

## கருத்துப்புலப்பாட்டு உத்தி

செய்திகள் அனைத்தையும் தொகுத்து மையக் கருத்தினை வெளிப்படுத்தும் நோக்கில் அமைவது கருத்துப் புலப்பாட்டு உத்தி எனலாம். நாவல்கள் கதைக்கருவை வெளிப்படுத்தப் பொருத்தமான நிகழ்ச்சிகளை இணைத்து கதைப்பின்னலை உருவாக்குவதே கருத்தமைவிற்குப் பொக்கிசமாகும். இத்தகையவற்றை உள்ளடக்கிய கட்டமைப்பே கருத்துப் புலப்பாட்டு உத்திக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

"கரும்புச்சர்க்கரை மூட்டைகளும், விறகுகளும் ஏற்றிக்கொண்டு மலையடிவாரக் காட்டுக்குப்போன வண்டியில் நமச்சிவாயமும் சேர்ந்து கொண்டான். மொண்டிமாரியும் அவன் தம்பி பாலுத்துரையும் சாராயங் காய்ச்சுகிற வேலையைச் சாப்பு மூப்பாகச் செய்து வருவது இவனுக்கு நன்றாகவே தெரியும்". (கி.வா. 43)

என்ற கருத்து சாராயம் காய்ச்சும் தொழிலுக்குத் தனிமையான இடமும், அதற்குத் தேவையான பொருளும் எவை எவையெனக் கூறுகிறது. மேலும் அத்தொழிலை அனுபவம் வாய்ந்தவர்களால் மட்டுமே செய்யமுடியும் என்பதையும், அவர்கள் சமூக விரோதிகள் எனவும் இனம் காட்டி நிற்கிறது. ஒரு செய்தியை விளக்கமாகவும், தெளிவாகவும் கொடுக்கக் கூடிய முறையில் அமைந்த இப்பகுதி கருத்துப்புலப்பாட்டு உத்திக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

## பாடல் உத்தி

காலத்துடன் மனிதனும் விரைந்தோடுகின்ற நேரத்தில் அறிவுரைகளையும், சமுதாய முன்னேற்றத்திற்குத் தேவையான செய்தியையும் பாடல் உத்தியினைப் பயன்படுத்திக் கருத்தை எளிதில் புரிய வைக்கின்றனர். இலக்கியம் ஒரு மலை எனில் பாட்டு அதன் சிகரம் எனலாம். இலக்கியம் ஒரு மரம் எனில் பாட்டு உத்தி அதன் கிளையாக விளங்குகின்றது என்பர் திறனாய்வாளர்.

"ஆடும் வயித்துக்கு மேஞ்சியிருக்கு....
மாடும் வயித்துக்கு மேஞ்சியிருக்கு...
ஆட்டையும் மாட்டையும் மேய்ச்சவன் வயிறு
ஆல எலைபோல காஞ்சிருக்கு..." (கி.வா.ப.191)

என்ற பாடல் உழைக்கும் பாட்டாளி வர்க்கத்தின் தேய்மானம் உழைக்காமல் வாழும் முதலாளி வர்க்கத்திற்கு வருமானம் என்பதை அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

## எடுத்துரை உத்தி

நாவலாசிரியர் தான் பெற்ற பட்டறிவுகளையும் அனுபவங்களையும் எடுத்துரைப்பதே எடுத்துரை உத்தியாகும். "தென்னையோலைகளால் வேயப்பட்ட சிறுசிறு பந்தல்களின் கீழே... துப்புறவாக சாணமிட்டு மெழுகிய பகுதியில் உட்கார வைப்பர். தாயை இழந்தவரோ, அன்றித் தந்தையை இழந்தவரோ, துணைவியை இழந்தவரோ என அந்த வகையில் அடங்கும் தாயை இழந்திருந்தால் அந்த இல்லத்தின் தலைமகனும், தந்தையை இழந்திருந்தால் அவரின் கடைசிமகனும் இந்தச் சடங்கு இங்கு வந்து செய்வது மரபாக கடைபிடிக்கப்படுகின்றது". (எதி.கோ.,ப.70)

பெண்ணிற்குரிய சிறப்புக்களில் ஒன்றாகக் குழந்தைப்பேறு கருதப்படுகிறது. இக்காரணத்தினால் முதல் குழந்தையே தாய்க்குரிய சடங்குகளைச் செய்கிறான். அடுத்ததாகக் கணவன் மனைவியின் சரியான புரிதலுக்குப் பின் பிறக்கும் குழந்தை தந்தைக்குரிய சடங்குகளைச் செய்யும் மகனாகச் சமூகத்தால் அங்கீகரிக்கப்படுகிறான். உளவியல் அடிப்படையில் பார்த்தால் இச்சடங்குமுறை சிறந்த நிகழ்வாகக் கருதப்படுகிறது. மேலும் அவர்கள் மரபு வழியாக அதனைப் பின்பற்றும் பழக்கமாகவும் உள்ளதை எடுத்துரை உத்தி மூலம் அறியமுடிகிறது.

## வினா - விடை உத்தி

படிப்போரின் சிந்தனைக்குச் சோர்வு சலிப்பு ஏற்படாதவாறு வினாக்களையும் அதற்கான விடைகளையும் சேர்த்தே உரையாடல் வடிவில் அமைத்திருப்பது நாவலாசிரியரின் திறமைக்கு மற்றுமொரு சான்றாகக் காணமுடிகிறது.

"நீயில்லாத நேரமாப்பாத்து அவா ரெண்டு பேர்த்துக்கும் சண்டை மூண்டுடுத்து..."

"நம்ம அம்மாவுக்கு, அப்பாவுக்குமா...?"

நம்பமுடியாதவளாய்க் கேட்டாள் இவள். நினைவு தெரிந்த நாளிலிருந்து அப்பாவின் பேச்சுக்கு மறுபேச்சுப் பேசியிராத அம்மாவா இன்றைக்கு எதிர்த்துப் பேசி சண்டை போட்டாள்...? (எதி.கோ.,ப.25)

என்ற வினாக்கள் வாசகரின் ரசனைக்கு விருந்தாக அமைவது மட்டுமில்லாது பெண்ணியத்தையும், யதார்த்த வாழ்க்கையில் கணவன் மனைவி இருவரின் சண்டையையும் நம் கண்முன் காணுமாறு அமைக்கப்பட்ட உத்தி நாவலின் போக்கிற்குச் சிறப்புச் சேர்க்கிறது.

## உரையாடல் உத்தி

உரையாடல் பேசுபவரின் நிலைக்கும், கேட்பவரின் நிலைக்கும் பேசப்படும் சூழலுக்கும் ஏற்ப பிறப்பதாகும்.

"இந்த மணி அய்யருக்கு இன்னிக்கு நேரஞ்செரியில்லையாட்டந் தெரியுது. இல்லீனா இப்பிடி வாங்கிக் கட்டியிருக்கோணுமா பின்னெ".

"இல்ல பூக்காரம்ம இவுரு பண்ணுனது தப்பு! அவிகபஸ்ஸை வுட்டு எறங்கனதுமே....? ஏனுங்க கருமாதிக் காரியங்களா...? நாங்க செஞ்சுகுடுக்கறோம்னு அவசரப்பட்டுக் கேட்டிருக்க கூடாது...என்ன சொல்றீங்க?"

"அது வாஸ்தவந்தானுங்க..."

இங்கே இருக்கிற நமக்குனா இவிக பாடு புரியுது. வெளியில இருந்து வாரவிகளுக்கு மொகத்துல அடிச்சாப்ல போகுதில்லைங்க.

ச்செரி போங்க... (எதி.கோ.,ப.81) என்ற உரையாடல் கொங்கு வட்டார மக்களின் பேச்சு வழக்கோடு பொருந்தியவாறு அமைந்திருப்பது சிறப்புக்குரியதாகிறது.

## குறியீட்டு உத்தி

படைப்பாளன், தான் சொல்ல விரும்பும் கருத்தை நேரடியாகக் கூறாது குறிப்பாக உணர்த்துவதுண்டு. அவ்வாறு குறியீட்டின் மூலம் உணர்த்துவது தற்காலப் புதினங்களில் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது.

"சமீப காலமாகப் பாத்திரத்தின் புறச் சூழ்நிலையில் இருக்கும் சில பொருள்களையும், அப்பாத்திரத்தின் பார்வையில் அடிக்கடி கண்ணில்படும் காட்சிகளைப் பயன்படுத்தி, அவைகளைப் பற்றிச் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் சிந்தனையில் வருவித்து வருணிப்பதாலும், விளக்குவதாலும் அந்தப் பாத்திரத்தின் மன உளைச்சலையும் சலனத்தையும் வெளியிடுவது ஆசிரியரின் ஒரு புதிய உத்தி. கதை மாந்தரின் அனுபவங்களில் அடிக்கடி இணைந்து நிற்கும் இதுபோன்ற நிகழ்ச்சிகளை வைத்துக் கதைப்போக்கில் வருணிப்பதைக் குறியீட்டு உத்தி என்று சொல்லலாம்".

விதைச்சோளம் என்ற புதினத்தில் பாத்திரத்தின் புறச்சூழல்களில் காணப்படும் அகப்போராட்ட உணர்வுகளைக் காட்டும் குறியீட்டு உத்தி சிறப்பாக அமைந்துள்ளது. நிலத்தைப் பண்படுத்தி, பயிரிட்டு விவசாயம் செய்த வேம்பன் ஊதிய உயர்வு கோரிய காரணத்தால், வேலை செய்ய உரிமையில்லை என்று நீக்கப்படுகின்றான். "கீழே கிடக்கும் மண்ணைப் பார்த்தான். இவனுடைய உழைப்பால் பண்பட்டுக் கிடந்த அதைக் கையில் எடுக்கக் கீழே குனிவதற்கு... ஏனோ மனம் ஒத்துக்கொள்ளவில்லை. தனது பாதங்களால் அந்த மண்ணை அழுத்தமாக மிதித்தவாறு... கண்களில் நீர்த்துளிகள் சரங்கோர்த்து நிற்க வேம்பன் அங்கிருந்து எதுவும் பேசாமல் வெளியேறிவிட்டான். (வி.சோ.,ப.158) இக்கருத்தின் மூலம் வேம்பனின் மன நிலையை விளக்கிக் காட்ட எண்ணிய ஆசிரியர், அதை நேரடியாகக் கூறாமல் அவனின் மனப்போராட்டத்தின் எண்ணங்களோடு ஒப்பிட்டு, குறியீட்டு உத்தியினால் அவனின் மன வலியை விளக்குவது சிறப்பாக அமைந்துள்ளது.

## பின்னோக்கு உத்தி

நிகழ்ந்த கால வரிசைப்படி கதை சொல்வது மரபுவழிக் கதைப் பின்னலாகும். சிக்கலின் நடுவிலே தொடங்கி முன் நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்ப்பதாக அமைப்பதும் உண்டு. இதுவே பின்னோக்கு உத்தி எனப்படும்.

1. நடப்புக் கதை நிகழ்ச்சியினூடே துண்டு துண்டாகவும் இடம் பெறலாம். கதாசிரியர் கூற்றாகவோ அல்லது கதைமாந்தர்களின் கூற்றாகவோ அமையலாம். மனசாட்சியின் கூற்றாகவும் அமைதல் உண்டு.

2. கதையின் முடிவை ஒட்டியும் இடம் பெறுதல் உண்டு.

இவர்கள் ஒருவருக்கொருவர் ஆறுதலாய் இருந்து தங்களது இல்லத்தினரைப் பற்றிய பிரிவுத்துயரை மறக்க முயற்சித்தனர். ஆனாலும், ஏனோ அது முடியவில்லை. பேரூர், ஆலமரத் தெருக்காரர்கள் ஒற்றுமையாயிருந்து சங்கம் அமைத்து குமாரசாமியின் தோழமையை நன்கு பயன்படுத்திக்கொள்ள எண்ணியிருந்த வேளையில்தான்... அவனுக்குத் திருமணமும், வேலை மாற்றமும் என அடுத்தடுத்தே நிகழ்ந்ததையும் நெகிழ்ச்சியுடன் எண்ணிப் பார்த்தான்(ஒரு.வ.கதை.ப.80) என்ற பகுதி நிறைவேறாத ஒரு செயலை நினைத்துப் பார்த்து ஏங்கும் சூழலை விளக்குகிறது. ஒவ்வொரு நாளும் மனிதர்கள் எதிர்கொள்ளும் நிகழ்வுகள், செயல்கள் எண்ணற்றவை. அவை அவர்களது வாழ்வியல் நினைவுகளில் எண்ணங்களில் திரும்பத் திரும்ப வருவதுண்டு. அதுவே பின்னோக்கு நிகழ்ச்சிக்குக் களமாக அமைகிறது.

## தொகுப்புரை

உத்தி ஒரு கலைப்படைப்பை உருவாக்குவதற்குப் படைப்பாளர் மேற்கொள்ளும் நுண்ணிய அணுகுமுறையாகும். எந்தக் கலையையும் நேர்த்தியாகப் படைத்துக் காட்ட கையாளப்படும் நெறிமுறைகளும் உத்தியாகும் என்று ஆக்ஸ்போர்டு அகராதியிலிருந்து விளக்கம் பெறமுடிகிறது.

கருத்துக்களைப் படிப்பவரின் மனதில் பதியவைக்கக் கையாளப்படும் முறைக்கு உத்தி எனவும் பெயர் கொள்ளலாம். யுக்தி என்ற வடமொழிச் சொல்லுக்குப் பொருத்தம், அனுமானம், நியாயம், கூரிய அறிவு, சூழ்ச்சி, புத்திமதி, விவேகம், ஆராய்ச்சி, உபாயம் என்று பொருள் பெறப்படுகிறது. வடமொழிச் சொல்லே உத்தி என்ற தமிழ் வடிவம் பெற்றது என்பர்.

## முடிவுரை

இன்றைய நவீன இலக்கியங்கள் முக்காலங்களையும் நம் கண்முன் நிறுத்துவதில் சிறப்பிடம் பெறுகின்றன. அந்த வகையில் சூர்யகாந்தன் ஒடுக்கப்பட்ட மக்களின் நிலைப்பாட்டையும், விழிப்புணர்ச்சி பெறுவதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதையும், சீரிய நோக்கோடு தம் புதினத்தில் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி, சமூகத்தை மாற்றம் பெறச் செய்யும் கருவியாகவும், கருத்துப்பெட்டகமாகவும், புதினங்களை ஆக்கம் செய்துள்ளார் எனில் சிறிதும் ஐயமில்லை.

# வாசகர் வாசகம் ②

அன்புடையீர்,

செந்தமிழ் திங்கள் இதழ் தரும் செறிவான படைப்புகள் சிந்தைக்கு உரமாகின்றன. கருவூலமெனக் கவனத்துடன் பாதுகாத்து வைக்க வேண்டிய பெட்டகமெனக் கருதுகிறேன். சங்கப் பெண் கவிஞர்களின் கருத்துப் புலப்பாட்டு நெறி பற்றிய பத்துநாள் பயிலரங்க நிகழ்வுகள், கேட்கும் ஆற்றல் குறைந்துவரும் முதுமைச் செவிகளிலும் வலுவாக ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

செந்தமிழ்க் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ள பொது நிகழ்வுகளின் நிகழ்ச்சி நிரல்களை முந்திய திங்கள் இதழ்களில் தர இயலுமா என்பதைப் பரிசீலித்திட அன்புடன் வேண்டுகிறேன்.

**நா. முத்தையா**

# பன்னிரண்டாம் திருமுறை காட்டும் திருத்தொண்டு

முனைவர் மா. செல்வத்தரசி
செந்தமிழ்க்கல்லூரி, மதுரை

## முன்னுரை

சைவ சமயத்தைப் போற்றி வளர்க்க முற்பட்டதில் தோன்றிய நூல் பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணமாகும். இந்நூல் தமிழகத்தின் பக்தி இயக்க வரலாற்றுக் களஞ்சியமாகவும் திகழ்கிறது. அறுபத்துமூன்று நாயன்மார்களின் இறைத்தொண்டை அடியொற்றி எழுந்த இந்நூல் 'சைவம்' என்பதனை 'சிவம்' என்றும், 'சிவம்' என்பதனை 'அன்பு' என்றும் குறிப்பிடுகிறது. இறைத்தொண்டு கொண்டவர்கள் இறையடியார்கள் (சிவனடியார்கள்) என்று அழைக்கப்படுகின்றனர். பன்னிரண்டாம் திருமுறை காட்டும் நாயன்மார்களின் இறைத்தொண்டு எத்தகைய இறையன்பை வெளிப்படுத்துகிறது என்பதனை வெளிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

## நாயன்மார்களும் திருமுறையும்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்கள் நாயன்மார்கள். இவர்களால் பாடப்பட்ட நூல் 'திருமுறை' என்று வழங்கப்படுகிறது. திருமுறை என்னும் சொல்லுக்குப் பிங்கலநிகண்டு **ஏடு, நூல்** என்று பொருள் கூறுகிறது. தமிழ் அகராதி, திருமுறை என்ற சொல்லுக்குச் **சிறப்பமைந்த நூல்** என்றுரைக்கிறது. இந்நூல் புனிதத் தன்மை உடையதாகும். நாயனார், நாயன்மார் என்பது திருத்தலத்திலுள்ள மூர்த்திகளைக் குறிப்பதாகக் கூறப்படுகிறது. நாயன்மார்களால் பாடப்பட்ட பக்தியைப் பத்மபுராணம் **அழகிய பெண்** என்கிறது.

> **திராவிட நாட்டில் நான் பிறந்தேன்**
> **கர்நாடகாவில் நான் வளர்ந்தேன்**
> **மகாராட்டிரத்தில் நான் சிறிது காலம் வாழ்ந்தேன்**
> **குஜராத்தில் நான் முதுமையுற்றேன்**

என்று திராவிட நாட்டில் பிறந்த பக்தியானது ஒவ்வொரு இடங்களுக்குமாகப் பரவிச் சென்ற நிலையினை இப்புராணம் புலப்படுத்துகிறது. சமய நூல்களாகிய இப்பக்தி நூல்கள் பகுத்தறிவினால் உருவாக்கப்பட்டதாகும். பகுத்தறிவிற்கு எட்டாததும் (Non-rational), செயலறிவிற்கு உட்பட்டதுமான

(Non-empirical) ஓர் உலகத்துடன் தொடர்புகொள்ள மக்கள் ஏற்படுத்திக் கொண்ட முறையே சமயம் என வரையறை செய்கிறார் பக்தவத்சல பாரதி.

## நாயன்மார்களின் திருத்தொண்டு

தொண்டு என்பது கைமாறு கருதாமல் பிறருக்கு உதவுவது. இறைவனுக்குத் தொண்டு செய்யும் போது 'திரு' என்ற அடைமொழியோடு சேர்த்துத் திருத்தொண்டு என்று குறிப்பிடப்படுகிறது. நாயன்மார்கள் தமது வறுமை நிலையிலும், அந்நிய அடக்குமுறையிலும், சாதியத் தீண்டல்கள் நிகழ்ந்த போதும் தமது திருத்தொண்டிலிருந்து சிறிதும் விலகாமல் செயலாற்றியுள்ளனர். இறைவன் வியப்புற்றுத் தம்மை ஆட்கொள்ளும் அளவுக்கு இறைத்தொண்டுகளைச் செய்துவந்துள்ளனர். செயலறிவிற்கு உட்பட்டதான இப்பக்தியினை நாயன்மார்கள் **விருந்தோம்பல், உயிரைப் பலியாக்குதல், தசக்குறைப்பு** போன்றவற்றால் வெளிப்படுத்தியுள்ளனர்.

## நாயன்மார்களின் விருந்தோம்பல் பண்பு

விருந்தோம்பல் என்பது தமிழரின் மரபான பண்பாடுகளில் ஒன்றாகும். பரஞ்சோதியார் என்ற இயற்பெயரினை உடைய **சிறுத்தொண்ட நாயனார்** விருந்தோம்பல் பண்பு மிகுந்தவர். இவர் தினமும் சிவனடியார் ஒருவருக்கு உணவளித்தபின்பு தாம் உண்பதை வழக்கமாகக் கொண்டவர். இவரது சிவத்தொண்டினை உணர்ந்த இறைவன் இவரை ஆட்கொள்ள தனது சித்து விளையாட்டினைத் தொடங்கினான்.

ஒருநாள் சிறுத்தொண்ட நாயனாரின் வீட்டிற்கு நெடுநேரமாகியும் சிவனடியார் யாரும் உணவருந்த வரவில்லை. அவருக்கு மிகுந்தபசி வந்துவிட்டது. உடனே வீட்டை விட்டு வெளியே சென்று அடியவரை அழைத்து வருவதாகக் கூறிச் சென்றுவிட்டார். அந்நேரம் அடியவர் ஒருவர் அவரது வீட்டிற்கு வந்தார். வீட்டில் உள்ள அவரது மனைவியிடம் உன் கணவர் இல்லையா? என்றார். சிறுத்தொண்ட நாயனாரின் மனைவியும் இப்போது வந்துவிடுவார் என்றார். ஆடவன் இல்லாத வீட்டில் தான் இருப்பதில்லை என்று கூறி அருகில் இருக்கும் ஆத்திமரத்தடியில் சென்று அமர்ந்து கொண்டார். அடியவர் யாரும் கிடைக்காத நிலையில் வீட்டிற்கு வந்த சிறுத்தொண்டரிடம், வீட்டில் இருந்த அவருடைய மனைவி, 'அடியார் ஒருவர் வந்தார்; அவர் ஆத்திமரத்தடியில் இருப்பதாகக் கூறிச்சென்றார்' என்றார். உடனே தாம் சென்று அழைத்து வருவதாகச் சிறுத்தொண்டர் கூறிச் சென்றார். ஆத்திமரத்தின் அடியில் இருந்த அடியவரை உணவருந்த வருமாறு அழைத்தார். அவரோ தாம் ஆறுமாதத்திற்கு ஒருமுறை மட்டுமே உணவு உண்பதாகவும், அதுவும் பசுமாமிசம் மட்டுமே என்றார்.

சிறுத்தொண்டநாயனாரும் தனது வீட்டில் பசுக்கள் நிறைய உண்டு; அவற்றில் தங்களுக்குப் பிடித்தது எதுவென்று கூறினால் உடனே அதனைச் சமைத்துத் தருவதாகக் கூறினார். அடியவரோ நான் கேட்பது நரபசு; அது ஐந்து வயது நிரம்பிய சின்னஞ்சிறு பாலகனாக இருத்தல் வேண்டும் என்றார். பாலகன் கிடைப்பது அரிது என உணர்ந்த சிறுத்தொண்டரும் அவரது மனைவியாரும் தனது ஐந்துவயதே நிரம்பிய பாலகனை அறுத்துச் சமைத்துக் கொடுத்தார்கள். உணவருந்த அமர்ந்த அடியவரோ உனது மகனையும் உணவு உண்ண அழைப்பாயாக என்றார். சிறுத்தொண்டரின் மனைவியார் வாயிலில் வந்து சீராளா! என்றழைக்க அப்பாலகனும் வெளியிலிருந்து ஓடிவந்தான். சிவபெருமானே அடியவராக் வந்ததைச் சிறுத்தொண்டரும் அவரது மனைவியாரும் உணர்ந்தனர்.

இதே போன்று மற்றொரு நாயன்மாராகிய **அப்பூதியடிகளார்** சைவக்குரவர் நால்வருள் ஒருவராகிய நாவுக்கரசர் மீது மிகுந்த பக்தி உணர்வு கொண்டிருந்தார். தம் ஊரில் உள்ள குளம், தண்ணீர்ப் பந்தல், வீட்டுச் சாமான்கள் மற்றும் தனது பிள்ளைகள் ஆகிய அனைத்திற்கும் **திருநாவுக்கரசு** என்றே பெயரிட்டிருந்தார். நாவுக்கரசர் தமது வீட்டிற்கு வந்தபோது அவருக்கு உணவளிக்கத் தனது மகன்களில் மூத்த திருநாவுக்கரசை அழைத்து வாழையிலை அறுத்துவரச் சொன்னார். வாழை மடலில் இருந்த பாம்பு அவனைத் தீண்டிவிட்டது. நாவுக்கரசருக்கு உணவளிக்க காலம் தாழ்த்தக் கூடாது என்று நினைத்த அவன் வேகமாக ஓடிவந்து தாயிடம் இலையைக் கொடுத்துவிட்டு அவளது மடியில் சாய்ந்தான். அவனது வேகத்தோடு பாம்பின் விடம் முந்தியதால் உயிர்நீத்தான். நாவுக்கரசருக்கு உணவளிப்பது நின்றுவிடக்கூடாது என்று கருதிய அப்பூதியடிகளாரும் அவரது மனைவியும் சேர்ந்து பையனை மறைவான இடத்தில் பாயில் சுருட்டி வைத்துவிட்டனர். உணவு உண்பதற்காக அமர்ந்த திருநாவுக்கரசர், 'அரும்புதல்வர்களும் நீரும் அமுதுசெய்வீர்' என்று கூறினார். பெற்றோர் அவன் இப்போது இங்கு உதவான் என்றனர். காரணத்தை உணர்ந்த நாவுக்கரசர் மூத்த திருநாவுக்கரசைக் காட்டுமாறு கூறினார். அவன் மீது ஒரு பதிகம் பாட அவன் தூங்கி எழுந்தது போல் எழுந்து வந்தான்.

இறையன்பு கொண்ட சிறுத்தொண்டரும் அப்பூதியடிகளாரும் தாம் பெற்ற மக்களைக் கூட பெரிதென்று எண்ணாத பேரன்பு அறியப்படுகிறது. இறைவனுக்குச் செய்யும் தொண்டில் எதையும் இழப்பதற்குத் துணிந்தவர்கள் நாயன்மார்கள் என்பது இதன்வழி உணரப்படுகிறது. பெற்ற தாய்க்கும் தகப்பனுக்கும் உணவளிக்க யோசிக்கும் இந்தக்

காலகட்டத்தில் நம் முன்னோர்களின் விருந்தோம்பல் வியக்கத்தக்கதாக அமைகிறது.

இறைவனுக்குச் செய்யும் திருத்தொண்டில் பிள்ளைகளை மட்டுமல்லாது தம்மையே இழக்கத் துடிக்கின்ற நாயன்மார்களும் இருந்திருக்கின்றார்கள். **அரிவாட்டாய நாயனார்** என்பவர் நெல்லறுக்கச் சென்றுவந்தார். அதில் கூலியாகக் கிடைக்கும் செந்நெல்லைச் சிவபெருமானுக்குத் திருவமுதாக்கினார். கார் நெல் அறுத்து அதற்குக் கூலியாகக் கிடைக்கும் கார்நெல்லை மட்டும் தமக்கு உணவாக்கிக் கொண்டு வந்தார். அவரது திருத்தொண்டினை உணர்ந்த இறைவன் அவரை ஆட்கொள்ள முற்பட்டார். நாயனார் வாழ்ந்த ஊரில் உள்ள வயல்களில் விளையும் நெல்லெல்லாம் செந்நெல்லாக விளையும்படிச் செய்தார். நாயனாரின் உணவிற்குக் கார்நெல் கிடைக்காமல் எல்லாம் செந்நெல்லாகவே கிடைத்தது. அதற்காக மனம் வருந்தாமல் முன்பைவிட மகிழ்ச்சியாக இருந்தார். செந்நெல் முழுவதையும் இறைவனுக்கே அமுதாக்கினார். தமக்குப் புறக்கடைத் தோட்டத்தில் உள்ள கீரையையும் இலைகளையும் பறித்து அதனைச் சமைத்து உண்டு வந்தார். இந்நிலையில் அரிவட்டாய நாயனார் செந்நெல்லரிச்சோறும், செங்கீரையும், மாவடுவும் எடுத்துக்கொண்டு இறைவனுக்குப் படைப்பதற்காகச் சென்றார். கால்இடறி உணவானது நிலப் பிளவுக்குள் கொட்டிவிட்டது. இதனால் துன்புற்ற நாயனார் அரிவாளை எடுத்து தமது கழுத்தை அறுக்க முற்பட்டார். அப்போது நிலவெடிப்புக்குள் இருந்து மாவடு கடிக்கும் ஓசையோடு ஒரு கை வெளிப்பட்டு அவரைத் தடுத்தது. இவ்வாறாக அரிவாட்டாய நாயனாரின் விருந்தோம்பலைக் கண்ட சிவன் அவரை ஆட்கொண்டான். மனிதர்களுக்குச் செய்யும் விருந்தோம்பலை மனிதன் மறந்துவிடக் கூடும். ஆனால் தான் பட்டினிகிடந்து தனக்குத் திருவமுது படைத்து வந்த அடியாரை இறைவன் ஆட்கொண்ட விருந்தோம்பல் பண்பு சிறப்புக்குரியதாகும்.

திருத்தொண்டுள்ளம் படைத்த நாயன்மார்கள் விருந்தோம்பலுக்கு எத்தகைய இடையூறுகள் வந்தாலும் அவற்றை எதிர்நோக்கும் மனப்பக்குவப் பாங்கினை உடையவர்காக விளங்கினர். விருந்தோம்பலுக்குக் காலம் தாழ்ந்தால் அதில் தம் மனைவி என்று கூட பார்க்காத நேர்மையும் நீதியும் வாய்ந்தவர்கள் நாயன்மார்கள்.

இதனைச் சிறப்பிக்கும் வகையில், **கலிக்கம்ப நாயனார்** என்பவர் சிவப்பற்றுத் தவிர வேறுபற்று அறியாதவர். அவர் கறிவகைகள், நெய், தயிர், பால், கனி வகைகளால் திருவமுது செய்வித்து வந்தார். தனது திருமனையில் திருவமுது செய்விக்க வந்த திருந்தொண்டர்களை எல்லாம்

திருவமுது செய்விக்கும் முன் அவர்களது திருவடிகளை விளக்கத் தொடங்கினார். அவரது மனைவியார் கரத்திலே நீர்வார்க்க கணவராகிய கலிக்கம்பர் அடியார்களின் காலடிகளை விளக்கி பாத பூசை செய்துவந்தார். அப்போது முன்னாளில் தமக்குப் பணிவிடைக்காரராய் இருந்து ஏவற்பணியை வெறுத்துக் கோபித்துக் கொண்டு வெளியேறிய ஒருவர், சிவனடியார் வேடந்தாங்கி அடியார்களில் ஒருவராக வந்து சேர்ந்தார். கலிக்கம்பர் அவரது திருவடிகளை விளக்கத் தமது திருக்கரத்தால் பற்றினார். அப்போது காதல் மனைவியார், 'இவர் முன்பு நமது ஏவலைச் செய்ய மறுத்துவிட்டுச் சென்றவர் போலும்' என்று எண்ணும் போது கரநீர் வார்க்கத் தாமதப்பட்டது. அதைக் கண்டதும் கலிக்கம்பர் தம் மனைவியாரை ஏறிட்டுப் பார்த்து இவள் இவ்வடியார் முன்பு இருந்த நிலையைக் குறித்து வெட்கித் திருவடி விளக்க நீர்வார்க்கத் தயங்குகிறாள் போலும் என்று கருதி அவளது கரகநீரைத் தாம் வாங்கிக் கொண்டு மனைவியென்றும் பாராமல் கரகநீர் வார்க்கத் தாமதித்த கையை வெட்டி எறிந்தார். கலிக்கம்ப நாயனார் அடியவர்களுக்குச் செய்ய வேண்டிய திருவமுதினைத் தாமே செய்தார்.

**இடங்கழியார்** அரசு புரிந்து வரும் காலத்தில் சிவனடியார்க்குத் திருவமுது செய்விக்கும் தவமுடையவர் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஒருநாள் திருவமுது செய்வதற்கான பொருட்கள் எங்கும் கிடைக்காமல் அவர் நியதிக்குத் தடை உண்டாயிற்று. அதனால் மனம் தளர்ந்தார். எப்படியாவது நெல் பெற வேண்டும் என்று கருதியவர் இடங்கழியாரின் அரண்மனைக்குள் நள்ளிரவில் திருடனைப் போல் புகுந்து பண்டாரத்து நெற்கூட்டில் நெல்லைத் திருடினார். காவலர்கள் அவரைப் பிடித்து அரசனாகிய இடங்கழியாரிடம் ஒப்படைத்தனர். அரசனிடம் தான் சிவனடியார்களுக்குத் திருவமுது செய்விப்பது முட்டுப் பட்டது. அதனால் இவ்வாறு செய்தேன் என்றார். இடங்கழியாரும் மனமிரங்கி இவனன்றோ எனக்குப் பண்டாரம் ஆவார் எனக்கூறி பண்டாரங்களாகிய நீவிர் எல்லாவற்றையும் கொள்ளையாக முகர்ந்துக்கொள்ளலாம் என்று எங்கும் பறைசாற்றும்படிச் செய்தார்.

திருவமுது செய்விக்க காலம் தாழ்த்திய மனைவியின் கையையே அறுத்தெறிந்த கலிக்கம்பநாயனார், திருத்தொண்டர்களுக்குத் திருவமுது செய்விக்க தானே திருடனாக மாறிய அடியவர் ஆகியோரது செயல்கள் விருந்தோம்பல் பண்பின் மேன்மையைப் புலப்படுத்துகின்றன.

## உயிரைப் பணயம் வைக்கும் தொண்டுள்ளம்

நாயன்மார்கள் தம் திருத்தொண்டிற்காக உயிரைக் கூட துச்சம் எனக் கருதக் கூடியர்கள். மானிட சமூகத்தில் உருவ வழிபாடு, உயிர் வழிபாடு முதலான பல வழிபாடுகள் காணப்படுகின்றன. சிவ வழிபாட்டில் உருவ

வழிபாடு இருப்பினும் ஒளி வழிபாடே உண்மையான மெய்ப்பொருள் என்று அறியப்படுகிறது. தமிழகத்தில் திருவண்ணாமலையில் கார்த்திகை தீப வழிபாட்டினை இதற்குச் சான்றாகப் பகரலாம். ஒளி வழிபாடே இறைவனை அடைவதற்கான எளிய வழி என்பதனைத் திருமுறை காட்டும் நாயன்மார்களின் திருத்தொண்டு புலப்படுத்துகிறது.

**கணம்புல்ல நாயனார்** வேளூரில் பெருஞ்செல்வந்தராக வாழ்ந்து வந்தார். இவர் சிவபெருமானின் திருவடிகளே உண்மையான பொருள் என்று உணர்ந்தவர். சிவபெருமானுக்கு விளக்கேற்றியே செல்வம் எல்லாம் தீரச் செய்தவர். செல்வம் எதுவும் இல்லாத நிலையில் ஊரைவிட்டு சிதம்பர நகருக்குச் சென்றார். தம் வீட்டில் உள்ள பொருட்கள் அனைத்தையும் விற்று விளக்கேற்றினார். செல்வமும் பொருளும் தீர்ந்த நிலையில் புல் அறுத்து அதனை விற்று அதில் கிடைத்த பணத்தில் விளக்கேற்றுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒருநாள் புல் விற்கப்படவில்லை. தாம் இறைவனுக்குத் திருவிளக்கு ஏற்றும் நிலையில் இருந்து விலகக் கூடுமோ என்று எண்ணினார். அந்தப் புல்லையே கொண்டு வந்து திருவிளக்கில் இட்டு எரித்தார். அப்புல்லானது இறைவனது திருமுன்பு திருவிளக்கு எரிக்கும் முறைப்படியுள்ள முதல்சாமம் வரைக்கும் கூட எரிப்பதற்குப் போதவில்லை. கணம்புல்லர் அடுத்த விளக்கிற்குத் தமது தலையியுள்ள முடியை மடித்து வைத்து பேரன்புப் பொருளாக்கி எரித்தார். பின்பு கணம்புல்லர் சிவலோகத்தை அடைந்து இனிதாக வீற்றிருந்தார்.

**திருக்குறிப்புத் தொண்டநாயனார்** சிவனடியார்களுக்கு ஆடைகளைத் துவைத்துக் கொடுக்கும் தொண்டினைச் செய்து வந்தார். அவரது நேர்மையினைக் கண்ட இறைவன் அடியாராகத் தோன்றினார். அவரது கந்தை ஆடையினைத் துவைத்துத் தருகிறேன் என்று திருக்குறிப்புத் தொண்டநாயனார் கட்டாயப்படுத்தி வாங்கினார். ஆடையைப் பொழுது போவதற்குள் தருகிறேன் என்று கூறினார். திருக்குறிப்புத் தொண்டர் துவைக்க ஆரம்பித்ததும் மேகங்கள் எல்லாம் ஒன்று திரண்டன. மாலை நேரமும் நெருங்கியது. ஆடையினைத் துவைத்து உலர்த்த முற்பட்டதும் மழையும் பெய்தது. ஆடையைத் துவைத்து உலர்த்திக் கொடுக்க இயலாதே என்று வருத்தமுற்ற திருக்குறிப்புத்தொண்டர் அங்கிருந்த கற்பாறையின் மீது தனது தலையை மோதச்செய்தார். அப்போது சிவபெருமானின் மலர்ச்செங்கை தோன்றி அவரைத் தடுத்தது. அவரது தொண்டுள்ளத்தை அறிந்த இறைவன் அவரை ஆட்கொண்டு அருளினார்.

நாயன்மார்களிடம் தொண்டுள்ளம் மிகுந்து காணப்படுவதும், அதற்காகத் தம் உயிரையே மாய்த்துக் கொள்கின்ற தன்மையினையும் உடையவர்களாகக் காட்சியளிக்கின்றனர். இந்நிலையில் சாதாரண

மனிதன் கூட சிறந்த தொண்டுள்ளம் கொண்டவன் என்பதனைச் சிலம்பு,

**மருவூர் மருங்கின் மறம் கொள் வீரரும்**

**பட்டின மருங்கின் படைகெழு மாக்களும்**

**முந்தச் சென்று முழுப் பலி பீடிகை**

**வெந்திறல் மன்னர்க்கு உற்றதை ஒழிக்க எனப்**

**பலிக் கொண்ட புரிந்தோர் வலிக்கு வரம்பு ஆக என** என்று குறிப்பிடுகிறது.

பட்டினப்பாக்கத்தின் பக்கமாக வாழ்ந்த படைவீரர்களும் காவல் பூதக்கோயில் வாயிலின் முன் உள்ள பலிபீடத்தின் முன்னே சென்று, 'வெல்லும் திறமுடைய எங்கள் மன்னருக்கு வந்த துன்பம் தொலைக்கத் துணை செய்வாயாக! என்று, காவல் பூதத்திற்குத் தம் உயிரையே பலியாகத் தருவோர் வலிமைக்கு எல்லை வகுப்பவர்கள். இவர்கள் போர்க்களப் பூமியிலே, அச்சம் தரும் கடை சிவந்த கண்களையுடைய தங்கள் அழகிய தலையைப் பலிபீடத்தில் வைத்து, வேந்தர் வாழ்க, வெற்றிகள் பெறுக என்று கூறியபடியே உயிர்ப்பலி ஊட்டினர்.

இதனையே புறப்பொருள் வெண்பாமாலை அவிப்பலி என்கிறது. போர்க்களத்தில் ஆருயிர் என்னும் அவியைச் சொரிந்ததால் இது அவிப்பலி ஆயிற்று. வேள்வித்தீயில் பல்வேறு பொருள்களைச் சொரிவர். அதுபோல போர்க்களத்தில் அரசனின் செஞ்சோற்றுக் கடனுக்காகத் தம் உயிரை விடுவர். அரசனின் வெற்றியின் வேண்டுதலுக்காகப் பலிபீடத்தின் முன்னர் தம் தலையைத் தானே அறுத்துக் கொள்ளும் நிலையினையும் கூறுகிறது.

இறைவன், அரசன் என்று தாம்காணும் நல்லுள்ளங்களுக்காக மனித சமூகத்தில் உயிரையே மாய்க்கின்ற திருத்தொண்டுள்ளம் அறியப்படுகிறது.

## தசம்குறைத்தல் வழித் திருத்தொண்டு

நாயன்மார்கள் தமது திருத்தொண்டிற்காகத் தமது அங்க அழகினைக் கூட குறைத்துக் கொள்ளும் நியதியினைக் கொண்டிருந்தனர். **திண்ணன்** என்பவன் வேட்டுவர் குலத்தைச் சார்ந்தவன். அவன் வேட்டைத் தொழிலினைச் செய்து வந்தான். அவன் சிவபெருமானுக்குத் தன்வேட்டையில் கிடைத்த இறைச்சிகளைச் சுவைத்துப் பார்த்து படைத்து வந்தான். ஆகமமுறைப்படி பூசை செய்து வரும் சிவகோசியார் இதனைக் கண்டு வியந்து இறைவனை வேண்டினார். திண்ணனையும் எச்சரித்தார். ஆனால் அவன்தான் செய்வதனை வழக்கமாகக் கொண்டிருந்தான். சிவகோசரியார் வருவதற்கு முன்பாகத் தாம் வேட்டையாடிய இறைச்சி உணவைத் தம்கையிலும், தூய்மையான மஞ்சன நீரினைத் தம் வாயினுள்ளும் இறைவனின் திருவடியில் சாத்தவேண்டிய மலர்களைத்

தம்முடைய குடும்பியிலும் எடுத்துக் கொண்டு திருக்காளத்திநாதரை நோக்கி விரைந்தார். அப்பொழுது தீய சகுனங்கள் தென்பட்டன. அவை இரத்தக் குறிப்பைக் காட்டுகின்றனவே? எம்பெருமானுக்கு நான் இல்லாத நேரத்தில் என்ன தீங்கு நிகழ்ந்ததோ என்று எண்ணிக் கொண்டே ஓடிவந்தார்.

திண்ணனின் பேரன்பு முழுமையையும் சிவகோசரியாருக்குக் காட்டுவதற்குச் சிவபெருமான் தமது சிவலிங்கத் திருமேனியில் முகம் ஒன்றும் அதில் மூன்று கண்களும் காட்டினார். அந்தக் கண்களுள் வலது கண்ணிலிருந்து இரத்தம் வடியும்படிக் காட்டிக் கொண்டிருந்தார். அதைக் கண்ட திண்ணன் ஓடிவந்தான். பூசைக்குக் கொண்டு வந்த பொருட்கள் சிதறின. தனது சிந்தை பதைபதைக்க தரையில் விழுந்து துடித்தான். இக்கொடிய செயலை யார் செய்தது என்று காட்டிற்குள் சென்று, கொடிய வேடர்கள், மிருகங்கள் எவையேனும் தென்படுகின்றனவா? என்று பார்த்தான். அவை எதுவுமே அங்குத் தென்படவில்லை. மலையடி-வாரத்திற்குச் சென்று மூலிகைகளைத் தேடிக் கொண்டு வந்து சாற்றைப் பிழிந்து இறைவனது கண்ணில் விட்டான். பலன் ஏதுமில்லை. "ஊனுக்கு ஊனே உற்ற நோய் தீர்க்கும்" என்ற பழமொழி நினைவுக்கு வரவே தனது வலது கண்ணை அம்பினால் தோண்டி காளத்திநாதரின் புண்பட்ட கண்ணில் பொருத்தினான். இரத்தம் நின்றது கண்டு ஆனந்தக் கூத்தாடினான். ஆனால் இடது கண்ணில் இருந்து இரத்தம் வழிந்தது. இரத்தம் ஒழுகும் கண்ணில் தனது காலை ஊன்றிக் கொண்டு தனது மற்றொரு கண்ணையும் தோண்டுவதற்கு முயன்றான். அப்போது காளத்திநாதர் தம் திருக்கையை வெளியே நீட்டி அவனைத் தடுத்து, நில்லு கண்ணப்பா! நில்லு கண்ணப்பா! நில்லு கண்ணப்பா! என்றார். இத்தகைய திருவாக்கால் அவனுக்கு அருள் புரிந்தார். சிவகோசரியார் அதைப் பார்த்து வியப்புற்றார். அன்று முதல் திண்ணன் **'கண்ணப்பர்'** என்று அழைக்கப்பட்டான்.

**கழற்சிங்கர்** என்ற அரசர் அறநெறி தவறாமல் ஆட்சி செய்து வந்தார். பல சிவத் தலங்களை அவர் வழிபட்டு வந்தார். திருவாரூரைக் கடந்து புற்றிடங்கொண்ட பெருமானை வணங்கினார். அப்போது திருக்கோயிலை வலம்வரும்போது அவரது பட்டத்தரசியார் திருமாலைக்கட்டும் பெருமண்டபம் அருகில் கிடந்த மலரை எடுத்து முகர்ந்து பார்த்தாள். அதைக் கண்ட **செருந்துணையார்** என்ற திருத்தொண்டர் சினங்கொண்டார். கருவியொன்றினை எடுத்து வந்து மாலையை முகர்ந்து பார்த்த மூக்கை அறுத்தெறிந்தார். புற்றிடநாதரை வழிபட்டு வந்த கழற்சிங்கர் பூங்கொம்பு ஒன்று மண்ணில் புரள்வது கண்டு தவித்தார். காரணம் கேட்டறிந்தார். அப்போது அவர் மலரினை எடுத்த கை

இதுவன்றோ? என்று தன்பட்டத்தரசியின் கையை வெட்டி வீழ்த்தினார். இச்செயல்களுக்கு வலுச்சேர்க்கும் வகையில் சிலம்பில் ஒரு செய்தி சுட்டப்பட்டுள்ளது. கீரந்தை என்ற அந்தணன் வெளியூர் செல்ல இருந்த போது தனியே இருக்கும் தன் மனைவியிடம் பயப்பட வேண்டாம் என்று கூறினான். இங்கு அரசனுடைய காவல் என்பது சிறந்தது என்றும் கூறிச்சென்றான். சென்றவன் உடனே திரும்பி வந்து விட்டான். இருவரும் உரையாடிக் கொண்டிருந்தனர். இத்தனை நாளாக ஆளரவம் இல்லாத வீட்டில் இன்று பேச்சொலி கேட்கிறதே என்று எண்ணிய நள்ளிரவு சோதனைக்கு வந்த அரசன் அவசரப்பட்டு அவ்வீட்டின் கதவைத் தட்டிவிட்டான். உடனே உள்ளிருந்த மனைவி தன் கணவனிடம், அரசனின் காவல் இதுதானா? அரசின் காவல் இன்று என்னைக் காக்கத் தவறுமோ என்று பதறினாள். நிலைமையை அறிந்த மன்னன் பதறித் துடித்தான். இது தவறிப் போய் செய்த செயலாயினும் மாற்றான் வீட்டுக் கதவைத் தட்டிய தன்கையைத் தானே வெட்டிக் கொண்டு, நீதி தவறாத நேர்மையாளன் என்ற புகழுக்குரியவன் ஆனான்.

தவறுகளைத் தாமே தண்டனைக்கு உள்ளாக்கிக் கொள்வதில் இருந்து இவர்களின் நீதி தவறாத உள்ளம் உணரப்படுகிறது. ஆண்டவனுக்காகத் தமது அங்க அழகைக் குறைப்பதிலும் இவர்கள் பின்வாங்கியதில்லை. மனிதன் தான் அடையக் கருதுகின்ற இலக்குகளுக்கு உறுதுணையாக இருப்பவன் இறைவனே என்ற நம்பிக்கைக்கு உரியவர்கள். அத்தகைய இறைவனுக்கு முடியினைக் காணிக்கையாக்கித் தம் அழகினைக் குறைத்துக் கொள்ளும் நம்பிக்கையை உடையவர்களாகவும் காணப்படுகின்றனர்.

**மானக்கஞ்சாற நாயனார்** என்பவர் தவமிருந்து பெண் குழந்தையைப் பெற்றெடுக்கிறார். ஒவ்வொரு நிலையிலும் வளர்ச்சி-யடைந்த அப்பெண்குழந்தை திருமணப்பருவத்தை அடைகிறது. மானக்கஞ்சாற நாயனார் ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்கு அப்பெண்ணை மணம் செய்விக்க நினைக்கிறார். திருமண ஏற்பாடுகளும் செவ்வனே நடந்து கொண்டிருக்கின்ற. நிலையில் மாவிரதர் போல் வேடங்கொண்ட ஒருவரும் திருமணத்திற்கு வருகை புரிந்துள்ளார். தன்மகளை அழைத்து வந்து அந்த மாவிரதரை வணங்கும்படிக் கூறுகிறார். அவளின் அழகைக் கண்ட அவர் இப்பெண்ணின்முடி என் மார்பிலே அணியக்கூடிய பஞ்சவடி என்னும் மயிர்க்கற்றை பூணூலுக்கு உதவக் கூடும் என்றார். திருமணமாக இருக்கும் தன்மகளின் கூந்தலை அறுத்து மாவிரதரிடம் கொடுக்கின்றார். அவரும் அதனைப் பெற்றுக் கொண்டு உமாதேவியோடு மானக்கஞ்சாற நாயனாருக்குக் காட்சி அளித்து மறைகிறார்.

அந்நியர் அடக்குமுறை மேலோங்கியிருந்த காலகட்டத்தில் கர்நாடகத்தைச் சார்ந்த சமணமன்னன் மதுரையை வென்று சிவனடியார்களுக்குத் தீங்கிழைத்து வந்தான். **மூர்த்திநாயனார்** என்பவர் இறைவனுக்குச் சந்தனக்காப்பு சாத்தி வழிபட்டு வருபவர். அந்நியரின் அடக்கு முறையில் சந்தனக்காப்பு சாத்தமுடியாமல் நாயனார் துன்புற்றார். இறுதியில் தனது முழங்கையினைக் கல்லில் உரசி அதில் கிடைத்த இரத்தமும் சதையும் சேர்ந்த குழம்பினை இறைவனுக்குச் சாத்தி வழிபட்டு வந்தார். அப்போது இறைவன் காமனைக் கடிந்த போது இருந்த செந்நிற மேனியைக் காட்டி காட்சியளித்தார்.

நாயன்மார்கள் இறைவனுக்குச் செய்யும் திருத்தொண்டில் தமது உடல் அங்கங்களைக் குறைத்து தமது நியதிகளை நிறைவு செய்து கொண்டனர். நாயன்மார்களின் இத்தகைய செயல்கள் வழி **உள்ளமே பெருங்கோயிலாகக் கொண்டவன்** இறைவன் என்பது புலப்படுகிறது. **பூசலார்** என்ற நாயனார் தனது வறுமைநிலையிலும் இறைவனுக்குக் கோயில் கட்டி வழிபாடு செய்ய முயன்றார். அதற்கான வழியில்லாததால் தன்மனதிலேயே தினமும் ஒரு கட்டிடப்பணியாகச் செய்து வந்தார். அந்நாட்டு மன்னனும் இறைவனுக்குக் கோயில் கட்டி வந்தான். அரசனது கோயில் கட்டிடப்பணிகளும், பூசலார் தன்மனதில் கட்டிவந்த கட்டிடப்-பணிகளும் ஒன்றாக நிறைவடைந்தன. மன்னன் தான் கட்டிய கோயிலுக்குக் குடமுழுக்குச் செய்ய நினைத்தான். அன்றிரவு இறைவன் அவரது கனவில் தோன்றி தான் பூசலார் கட்டிய மனக்கோயில் குடமுழுக்கில் எழுந்தருளுவதாகக் கூறினார். மக்களின் உள்ளமே ஒரு கோயில் என்பதனை இறைவனே காட்டியருளினார் என்பதும் வெளிப்பாடு.

## முடிவுரை

நாயன்மார்களின் தொண்டு என்பது செயலறிவால் புலப்படக் கூடியதாவும் அமைகிறது. வறுமையிலும் துன்பத்திலும் இன்னல்களை எதிர்கொண்டு இறைவனை அடைபவர்களாக நாயன்மார்கள் விளங்கியுள்ளனர். காதல் மனைவி என்று கூட பார்க்காத தெய்வக்காதல் கொண்டவர்கள் நாயன்மார்கள். இன்றைய சமூகத்திற்கு இவர்களின் திருத்தொண்டு ஒரு சான்றாகத் திகழ்கின்றது.

*பற்றற்ற கண்ணும் பழமைபா ராட்டுதல்*
*சுற்றத்தார் கண்ணே உள.* அதிகாரம் : 53 – 521

***இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாம்தம்***
***மகிழ்ச்சியில் மைந்துறும் போழ்து.*** அதிகாரம் : 54 – 539

# பொருளதிகார நோக்கில் இளம்பூரணரின் உரைச்சிறப்புகள்

செல்வி க. செல்வி
முனைவர் பட்ட ஆய்வாளர்,
கணேசர் கலை அறிவியல் கல்லூரி

தமிழ் இலக்கணத்தில் காணப்படும் தனிச்சிறப்புக் கூறுகளில் ஒன்று பொருள் இலக்கணம் ஆகும். தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளையும் அவ்வாழ்வை இலக்கியமாக்கும் நெறிமுறைகளையும் கூறுவது பொருளிலக்கணம் ஆகும். மக்கள் வாழ்வியல் அனைத்தையும் இலக்கியமாக்க வேண்டும் என்பது தமிழர்களின் இலக்கியக் கோட்பாடன்று. அவற்றைப் பாகுபாடு செய்து நெறிமுறைப் படுத்தும் நிலை தமிழில் மிக அழுத்தமாகக் காணப்படுகிறது. அதாவது இலக்கியத்தில் அமையும் பொருளுக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது. இதற்கு உரையாசிரியர்கள் செய்துள்ள தொண்டு அளப்பரிய தொண்டாகும். காலம் பல கடந்தும் இலக்கண வளம் குன்றாத நூல் தொல்காப்பியம் ஆகும். இந்நூலில் உள்ள பொருளதிகாரம் நம் தமிழ்ப் பண்பாட்டினையும் மரபினையும் விளக்கி நிற்கின்றது. இவற்றினை நுண்ணுதின் உணர்ந்து இளம்பூரணர் உரையெழுதியுள்ளார். தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பழந்தமிழர் நாகரிகக் கையேடு என்றே குறிப்பிடலாம். இதன் கண் தொல்பழங்கால பண்பாட்டு மானுடவியல் சார்ந்த தமிழினத் தோற்ற வளர்ச்சி பற்றிய வரலாறு சார்ந்த குறிப்புகளும் உள. தொல்காப்பியரின் சமகாலத் தமிழின வாழ்வியல் பதிவுகளும் உள. எதிர்கால மானுட இனம் குறிப்பாகத் தமிழினம் எவ்வாறு வாழ வேண்டுமென வழி காட்டுகின்ற இடங்களும் பலவுள. இவையும் தனியே எடுத்தெழுதி விளக்கப்பட வேண்டும். (தமிழண்ணல்; தொல்; பொருள். ப.9) என்கிறார் தமிழண்ணல். இந்நோக்கத்துடன் எழுதிய இளம்பூரணரின் உரை ஆற்றொழுக்கான உரையாக அமைந்துள்ளது.

மனித இன வளர்ச்சிக்குத் தேவையான காதலை அகம் என்றும், அகமல்லாத பிறவற்றைப் புறம் என்றும் தமிழர் வகைப்படுத்திக் கொண்டனர். தொல்காப்பியர் உலகில் உள்ள காட்சிப்பொருள், கருத்துப்பொருள் ஆகிய அனைத்தையும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்றாகப் பகுத்து விளக்கியுள்ளார். தொல்காப்பியத்திற்குப் பலர் உரையெழுதியிருந்தாலும் முதல் முழு உரையாசிரியர் இளம்பூரணர் ஆவார். இவர் தொல்காப்பியப்

பொருளதிகாரத்திற்கு நூற்பா, நூற்பா விளக்கம், இதன் பொருள், விளக்கவுரை, எடுத்துக்காட்டு, இலக்கணக் குறிப்பு என்ற முறையில் உரையெழுதியுள்ளார். நூலுள் ஆழ்ந்திருக்கும் ஆசிரியரின் உள்ளத்தைக் காணவைப்பதும், அவர்தம் கருத்தை வெளிப்படுத்துவதும் அடிப்படையான உரை மரபாகும். இம்மரபை இளம்பூரணர் முழுமையாகக் கையாண்டுள்ளார். மேலும் நேர்பொருள் கூறுவதிலும், தொடர் விளக்கம் கூறுவதிலும் வல்லவராகிறார்.

ஓரிடத்தில் கூறிய எடுத்துக்காட்டு வேறோரிடத்தில் தர வேண்டியிருப்பின் "உதாரணம் முன்னர்க் காட்டுதும்" (நூற். 49) என்று கூறுவார். இதற்குக் காரணம் இவ்விடத்தில் கூறுவதை விட முன்னர் என்று அவர் கருதும் இடத்தில் கூறப்படுவதை இன்றியமையாததாகவும், தேவையானதாகவும் கருதியிருக்கக்கூடும்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்கு உரை எழுதும் முன் அகம், புறம் யாதென அவர் வினவியுள்ளார். நூலால் அடையத்தக்கன அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். இவை அகம், புறம் என்பனவற்றில் அடங்குமா என்ற கேள்வியை எழுப்பியுள்ளார். அகத்திற்குள்ளும் புறத்திற்குள்ளும் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் கூறப்படுவதாகக் கூறியுள்ளார். அதாவது அகப்பொருளாவது, போக நுகர்ச்சியாகலான் அதனான் ஆய பயன் தானே அறிதலின் அகம் என்கிறார்.

புறப்பொருளாவது மறஞ்செய்தலும் அறஞ்செய்தலும் ஆகலான் அவற்றான் ஆயபயன் பிறருக்குப் புலனாதலின் புறம் என்றார். தொல்காப்பியர் இன்பப் பகுதியையும், வீரப் பகுதியையும் மட்டும் விரித்துக் கூறியதற்கான காரணத்தை இன்னும் சிறப்பாக இம்முன்னுரைப் பகுதியில் இளம்பூரணர் கூறியுள்ளார். "பிற நூலாசிரியர் விரித்துக் கூறினாற் போல் அறமும், பொருளும் விரித்துக் கூறாதது என்னை-யோவெனின் உலகத்தில் நூல் செய்வார் செய்கின்றது. அறிவிலாதாரை அறிவுகொளுத்த வேண்டியன்றே; யாதானும் ஒரு நூல் விரித்தோதிய பொருளைத் தாமும் விரித்து ஓதுவாராயின், ஓதுகின்றதனாற் பயன் இன்றாமாதலால், முன்னூலாசிரியர் விரித்துக் கூறின பொருளைத் தொகுத்துக் கூறலும், தொகுத்துக் கூறின பொருளை விரித்துக் கூறலும், நூல் செய்வார் செய்யும் மரபு என்று உணர்க. அஃதேல் இந்நூலகத்து விரித்துக் கூறிய பொருள் யாதெனின் காமப் பகுதியும் வீரப்பகுதியும் என்க. இன்பம் காரணமாகப் பொருள் தேடும் ஆகலானும் பொருளானே அறம் செய்யும் ஆகலானும் இன்பமும் பொருளும் ஏற்றம் என ஓதினார் என

உணர்க" என்ற இளம்1பூரணரின் விளக்கம் போற்றுதற்குரியதாகும். இதுபோல நூலாசிரியரின் உள்ளக்கருத்தைப் பல இடங்களில் விளக்கியுள்ளார்.

இவை போன்று 'காமக்கிழத்தியர்' என்ற சொல்லுக்கு விரிவான விளக்கம் தந்துள்ளார். இளம்பூரணர் தொல்காப்பிய நூற்பாக்களுக்குத் தாம் கூறும் உரைவிளக்கம் ஒவ்வொன்றிற்கும் இயன்ற வரை தமக்கு முன் தோன்றிய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டிக்கொண்டே செல்கிறார். இன்று மறைந்து போன அரிய பல நூல்களிலிருந்தும் மேற்கோள் காட்டுவது இளம்பூரணர் தமிழ் உலகிற்கு ஆற்றியுள்ள பேருதவி ஆகும். இவர்தம் பொருளதிகார உரையைப் பயில்வார் அவருக்கு இருந்த பரந்துபட்ட நூலறிவை எளிதில் உணரக்கூடும். அவரது உரையால் (பொருள். 428) "ஆயிரம் விரித்த அணாங்குடை அருந்தலை" எனத் தொடங்கும் பரிபாடலின் கடவுள் வாழ்த்துப் பாடல் நமக்குக் கிடைத்துள்ளது. மறைந்து போன தமிழ் நூல்களான அகத்தியம், காக்கைப் பாடினியம், செயிற்றியம், பரிமாணச் சூத்திரம், பன்னிரு படலம் ஆகியவற்றையும் எடுத்தாண்டு உள்ளார்.

அறம், பொருள், இன்பம் என்பது வைப்பு முறை. இவ்வைப்பு முறையில்தான் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்று திருக்குறள் அமைந்துள்ளது. ஆனால் இன்பமும், பொருளும், அறனும் என்றாங்கு என்று முறை மாற்றித் தொல்காப்பியர் கூறியுள்ளார். இம்முறை மாற்றத்திற்குரிய காரணத்தை இளம்பூரணர் சிறப்பாக விளக்கியுள்ளார். "அறனும் பொருளும் இன்பமும் என்னாது, இன்பமும் பொருளும் அறனும் என்றது என்னையெனின் பலவகை உயிர்கட்கும் வரும் இன்பம் இருவகைப்படும். அவையாவன போகம் நுகர்தலும் வீடுபெறுதலும் என அவற்றுள் வீடுபேறு துறவறத்தில் நின்றார்க்கல்லது எய்தல் அரிதாயிற்று. போக நுகர்தல் மனையறத்தார்க்கெய்வது. இவரெய்தும் இன்பமும் அவ்வின்பத்திற்குக் காரணமாகிய அறனும் எனக் காரிய காரணம் நோக்கி வைத்தார்." (நூ.89). என்பது அவ்வுரையாகும். மேலும் "இன்பம் காரணமாகப் பொருள் தேடும் ஆகலானும், பொருளானே அறம் செய்யும் ஆகலானும் இன்பமும் பொருளும் ஏற்றம்" என்று காரிய காரண முறையில் இளம்பூரணர் கூறும் விளக்கம் சிறப்பான விளக்கமாகும்.

## அடைமொழி நயம்

பொருள் பொதிந்த அடைமொழித் தொடர்கள் தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாக்களில் மண்டிக் கிடக்கின்றன. இந்த அடைமொழி-களின் நயங்களை இளம்பூரணர் தம் உரையுள் ஆங்காங்கே எடுத்துக்

காட்டியுள்ளார். களவு வாழ்க்கையில் தலைவனுக்கும் தோழிக்கும் இடையில் நின்று அவர்களது களவு வாழ்க்கைக் கற்பு வாழ்க்கையாக மாறுதற்குப் பெருந்துணை புரிபவள் தோழியாவாள். எனவே அவள் கூறும் சொற்கள் நன்மை பயப்பனவாகவே அமையும். நன்மை பயப்பதற்காகக் கூறும் கடுஞ்சொற்களும் சொல்லளவிலேயே கடுமையானதாக அமையும். மனதளவில் இல்லை. இதனைத் தொல்காப்பியர் **'செங்கடு மொழி'** என்கிறார்.

செங்கடு மொழியால் சிதைவுடைத்தாயினும்
என்புநெகப் பிரிந்தோள் வழிச் சென்று கடைஇ
அன்புதலை அடுத்த வன்புறைக் கண்ணும் (நூ.112)

செங்கடு மொழி யென்றது கொடிய கடுமொழியேயன்றி மனத்தினான் இனியளாகிக் கூறும் கடுமொழி என்று செங்கடுமொழி என்ற சொல்லின் பயன் உணர்ந்து திறனறிந்து நயந்தோன்றக் கூறியுள்ளார். இது இளம்பூரணரின் அருமையானதொரு உரை விளக்கம் ஆகும்.

கற்பியல் உரைப்போக்கில் ஒரு புதிய முறையை இளம்பூரணர் மேற்கொண்டுள்ளார். நூற்பாவின் ஈற்றடிக்கு உரிய உரையையும், விளக்கத்தையும் முதலில் கூறிவிட்டுப் பிறகு, நூற்பா முழுமைக்கும் உரை சொல்லும் தன்மை சிறந்த முறையாகக் காணப்படுகின்றது.

பிறர் காணுதற்கரிய இலக்கிய நயங்களை இளம்பூரணர் தொல்காப்பியப் பொருளதிகாரத்துள் கண்டுள்ளார். காட்டுவித்தால் ஆர் ஒருவர் காணாதாரோ என்று ஆன்றோர் கூறி இருப்பது போல், அரிய நயங்களைக் காட்டுவிக்கும் இளம்பூரணரின் துணையின்றி நம்மால் தொல்காப்பியத்தின் நயங்களை விளங்கிக் கொள்ள முடியாது.

உயிரும் நாணும் மடனும் என்றிவை
செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய (நூ.198)

என்ற நூற்பாவில் கூறப்படும் நால்வர், தலைவர், தோழி, நற்றாய், செவிலி ஆகியோர் ஆவர். இவர்களுக்கு இடையே நிலவிய நட்பின் நெருக்கத்தையும் ஆழத்தையும் தொல்காப்பியர் 'செயிர்தீர் சிறப்பின் நால்வர்' என்னும் தொடரால் விளக்கியுள்ளார். "செயிர்தீர் சிறப்பின் என்றமையான் ஏனையோர் போலாது இவர் நால்வரும் ஒரு நீர்மையர் என்று கொள்க. இதனால் சொல்லியது என்னையெனின், இந்நால்வரும் ஆக்கமும் கேடும் ஒருவர் மாட்டு வந்துழித் தமக்குற்றது போல் நினைப்பராதலான் ஒருவரையொருவர் இன்றியமையாது ஓருயிர் போல்வர் எனவும், நாணமும் மடனும் நால்வர்க்கும் ஒக்குமாகலான் அவலமாகிய வழியும் வருத்தமும் ஒக்கும் எனவும் கூறியவாறு" என இத்தொடரின் நயத்தினை விளக்கியுள்ளார்.

இவற்றிலிருந்து நூலாசிரியரின் நோக்கத்தினைத் தெள்ளிதின் புலப்படுத்துவதில் வல்லவர் இளம்பூரணர் என்பதை அறியலாம். இவர்தம் தொல்காப்பிய உரை தமிழ் இலக்கண வானத்தில் தனிச்சிறப்புடன் ஒளிவீசும் முழுநிலவாய் விளங்குகின்றது. பல்வேறு சிறப்புகளும் ஒருங்கே நிறைந்து விளங்கும் மூல முதல் உரையாகத் துலங்கும் இப்பேருரையினை இயற்றிய இளம்பூரணர் ஓர் உரை வித்தகர் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

# வாசகர் வாசகம் ③

மதிப்பிற் சிறந்த செந்தமிழ் ஆசிரியருக்கு, வணக்கம்.

பட்டமளிப்பு விழா நிகழ்வினைப் படச்செய்தி வழி அறிந்து உவகை கொண்டோம்.

இதழ்மணம், தோரணவாயிலாக அமைந்து, ஐந்து கட்டுரைகளை ஐந்து பத்திகளில் அறிமுகம் செய்து, படிக்கும் ஆர்வம் தூண்டுகிறது.

வளாகச்செய்திகள், மதுரைத்தமிழ்ச்சங்கக் கல்விக்கொடையால் புலமை பெற்ற ஆயிரக் கணக்கானவரைப் பெருமகிழ்ச்சியில் திளைக்கச் செய்யும் என்பது திண்ணம்.

இல்லறத்தைப் போற்றுகின்ற கவிவேந்தர்பா இனியது.

பக்கம் 26 வாசகவரிகளும், அதன் தொடர்ச்சிப் பக்கம் 27ல், அச்சிடுமாறு தொடங்கும் கட்டுரையும், இதழ்தொகுப்புக்கலையில் செந்தமிழின் பரிணாமத் தேர்ச்சி காட்டும் உயர்சான்றுகளாம்.

சங்க... அறச்சிந்தனைகள் கட்டுரை அருமை! முன்னுரையில் சமயம் என்பது பற்றிக் கட்டுரையாளர் குறிப்பிடும் கருத்தோடு, 1923ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற அறிவியல் அறிஞர் ஐன்ஸ்டீன் ஒருசமயம் கூறிய அறிவியல் தேடல் மற்றும் ஆன்மிக உணர்வு பற்றிய கருத்துரையின் ஒரு பகுதி இணக்கமாக உள்ள நயம் அறிந்து, வியந்து பாராட்டலாம்; ஒன்பது வகை வழிபாட்டு முறைகள், சமண பௌத்த அறநெறிகள் ஆகியவற்றுக்கு நேர்த்தியான சான்றுகளை முன் வைத்துள்ளார்.

18 கருத்துகளின் தோரணமாக, மூன்று பக்கத்தில் அமைந்த உக்கிரப்பெருவழுதி - ஓர் ஆய்வு கட்டுரை, சங்கநூல்கள், சைவநூல்கள், உ.வே. சாமிநாதய்யர் குறிப்பு துணைகொண்டு, வழுதியின் பெருமை, நூல்களைத் தொகுத்த சிறப்பு உணர்த்திப் பெருமை கொள்கிறது.

இராமலிங்கர்...கட்டுரை, சித்து, முக்தி, உள்ளொளி, உயிரிரக்கம், பசிநீக்கல் விளக்கி, அருட்பா பயில அவா ஊட்டும்.

இறையனார்...கட்டுரை, அகப்பொருள் பயிலும் மாணவர் ஒவ்வொருவரும் அவசியம் பயிலத் தகும் அருமையான கட்டுரை! எளியேனின் கட்டுரையும் வெளியிட்ட தங்களுக்கு, நன்றி!

அன்புடன்,
புலவர் சி. **பாண்டுரங்கன்,** ஆம்பூர்

# தமிழரின் மறுமைக் கோட்பாடு

புலவர் தா. குருசாமி தேசிகர்
தருமையாதீனப்புலவர்

"ஒருவன் இறந்தும், அவனுடைய ஆன்மா அவன்செய்த நல்வினை தீவினைகளுக்குத்தக, மோட்சலோகத்துக்கோ அல்லது நரகலோகத்துக்கோ செல்லும்" என்னும் கருத்தைத்தான், வேதங்களிலே காண்கிறோம். ஆன்மாக்களுக்கு மறுபிறப்பு உண்டென்னும் கருத்து வேதங்களில் வெளிப்படையாகக் காணவில்லை. மிக முக்கியமாக இக்கருத்து வேதமந்திரங்களிலே வெளிப்படையாக இடம் பெறாதது சற்று வியப்பாகவே உள்ளது" என்று "இந்திய தத்துவஞானம்" நூலாசிரியர் திரு. கி. இலட்சுமணன் ஆராய்ந்து கூறுவதாக, "மூன்றாவது கோட்பாடு" கட்டுரை ஆசிரியர் முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் மேற்கோள் காட்டி ஆராய்வார். அவரது ஆய்வு, தமிழரின் சிவநெறிக்கு அரண்செய்வது. தொகுத்து அவரது கட்டுரைச் செய்திகளை நன்றியுடன் நிரல்படக் காண்போம்.

## சங்க இலக்கியங்கள்

'பண்டைக் கிரேக்க' உரோமைய, வடமொழி இலக்கியங்களினும் 'பகுத்தறிவு' சார்ந்த செவ்வியுற்பண்பு,சங்க இலக்கியங்களுக்கே உண்டு என்றும், 'பகுத்தறிவு சாராத மிகு கற்பனையில்லாத சிந்தனைப்பள்ளியில் தோன்றிய, மெய்யியற்கோட்பாடுகளையும் செறியக் கொண்டன சங்க இலக்கியங்கள்' என்றும் தோற்றுவாய் கூறி மேலும் ஆராய்வார்.

## வேதகால மெய்யியல்

வேதகால மெய்யியல், 'பிறப்புக்கு அப்பாற்பட்ட உலகினைக் குறித்து, ஆராய்ச்சியற்ற கருத்தினையே கொண்டிருந்தது' என்றும், 'இம்மை வாழ்வின் இயல்புகளில் சலிப்பும், வெறுப்பும் ஏற்பட அதனிலிருந்து விலகிப்போதலையே அது துறவு எனக் கொண்டது' கயிறு பாம்பாகத் தோன்றுவது போன்ற மாயையே உலகை வாழ்வென, வேதகால மெய்யியல் கருதியது' என்றும், வாழும் உலகில் நல்வினைகளை இயற்றினால் துறக்கம் செல்லலாம்' என்றும் 'வேதகால மெய்யியல் கூறிற்று' என்றும், இதற்கு இந்திய தத்துவஞான ஆசிரியரின் கூற்றை (முதல் பாராவில் உள்ளது) மேற்கோள் காட்டி ஆராய்வார்.

## இரண்டிற்கும் எடுத்துக்காட்டு

திருஞானசம்பந்தர் வேத நெறியையும், தமிழரின் சைவ நெறியையும் சம்பந்தப்படுத்தியவர். ஆதலால், அவரது திருவாக்கில் வேதநெறிக்கோட்பாடும், சைவ நெறிக்கோட்பாடும் விரவியே வருவதற்கு இரண்டு பாடல்களை எடுத்துக் காட்டலாம்.

**'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்**
**எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை**
**கண்ணில் நல்ல;, துறுங் கழுமல வளநகர்ப்**
**பெண்ணின் நல்லாளோடும் பெருந்தகை இருந்ததே'**

இப்பாடல் சைவ நெறிக்கோட்பாட்டைச் சார்ந்து விளங்குவது.

**'பெண்டிர் மக்கள் சுற்றமென்னும் பேதைப் பெருங்கடலை**
**விண்டு பண்டே வாழமாட்டேன் வேதனை நோய் நலிய**
**கண்டு கண்டே உன்றன் நாமம் காதலிக்கின்றதுள்ளம்**
**வண்டு கிண்டிப் பாடுஞ்சோலை வலிவலம் மேயவனே'**

இப்பாடல் வேதநெறிக்கோட்பாட்டைக் குறிப்பாக விளக்குவனவாம்.

## ஆய்வாளர் முடிவு

மறுபிறப்புப் பற்றிய சிந்தனை 'மறைமுகமாகவேனும் வேதத்தில் இல்லை' என்பதே உண்மை என்றும், 'மறு உலகம், மறுபிறப்பு அல்லது மறுமை பற்றி வேதங்கள் கூறவில்லை' என்றும், தமிழ்நெறிச் சிந்தனையின் மூலத்தில் இதற்குப் பேரிடம் உள்ளது என்றும் 'சிந்துவெளியிற் காணப்பெறும் பல்வகை எச்சங்கள் இக்கோட்பாட்டைத் தெளிவுறுத்தும் மூலங்களாகத் திகழ்கின்றன' என்றும், ஆய்வாளர் முடிவு கூறுவார். சங்கப் பாடலில் மறுமை அல்லது மறுபிறப்புக் குறித்த சிந்தனை மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்படுகிறது என்பதற்கு இரண்டு பாடல்களைக் காட்டி ஆய்வாளர் தெளிவுறுத்துவார்.

**'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்**
**புல்லாளே ஆயமகள்'** என்றும்,
**'இம்மை மாறி மறுமையாயினும்**
**நீயாகிய ரென் கணவனை**
**யானாகியர் நின்னெஞ்சு நேர்பவளே'**

என்றும், முறையே கலித்தொகை, குறுந்தொகைப் பாடல்கள் மூலம் தமிழரின் மறுமை உணர்வை உணரலாம்' என்றும் 'இதுவும் ஒரு சமய அடிப்படையிலான கோட்பாடே' என்றும் கட்டமைப்புச் செய்வார்.

## நம்பிக்கையின் சிறப்பு

'இறப்பையும் இறப்புக்குப்பின் என்ன என்பதையும்,, ஓர் இனம் ஆழ்ந்து சிந்தித்திருக்கிறது' என்பதையும் ஒன்றும் புலனாகாத நிலையில் மறுபிறப்புப் பற்றிய, ஒரு கோட்பாட்டை உருவாக்கியிருக்கிறது என்பதையும், ஒரு கோட்பாடு உண்மையானது என்பதைவிட, நிகழ்கால வாழ்விற்கு, அழுத்தமான அடித்தளம் அமைப்பதாயிருப்பது மேல் என்ற கருத்தில், இந்த மறுமைக் கோட்பாடு தமிழர்களுக்கு நலம் பயப்பதாக அமைந்திருந்தது' என்பதையும் ஆய்வாளர் கருதுவார்.

## கோட்பாட்டின் பயன்

இம்மறுமைக் கோட்பாட்டின் பயன், இப்பிறவியில் மட்டுமன்று; இனிவரும் பிறவிகளிலும், 'நீயே என் கணவன்' நானே உன் மனைவி

என்ற மறுமைக் கோட்பாட்டினடிப்படையில் கூறப்பெற்ற கருத்து, வேறு எப்பயனைத் தராவிடினும், இறுக்கமான இல்லறப்பிணைப்பிற்கும், தலைவனின் 'புறம்போய் அலையும்' நெஞ்சை, மனையறக் கட்டுத்தறியிலிருந்து, விடாது தகைந்து நிறுத்தற்கும் பயன்படும் என்ற நோக்கு, இக்கோட்பாட்டை உருவாக்கியவர்களுக்கு இருந்து வளர்ச்சி பெற்றிருக்கவேண்டும் என்பது ஆய்வாளரின் முடிந்த முடிவாகும். இம்முடிவின் இலக்கியமாகத் திருநாவுக்கரசரின் திருவுள்ளத்தில் இக்கோட்பாடு ஒரு பாடல் மூலம் விளக்கம் பெறுகிறது. அப்பாடல்,

**'துறக்கப்படாத உடலைத் துறந்து வெந்தூதுவரோடு இறப்பன்**
**இறந்தால் இருவிசும்பேறுவன் ஏறிவந்து மீண்டும்**
**பிறப்பன்; பிறந்தால் பிறையணிவார் சடைப்பிஞ்ஞகன்பேர்**
**மறப்பன் கொலோ? என்று என் உள்ளங்கிடந்து மறுகிடுமே'**

இப்பாடலில் அமைந்த மறுமைக்கோட்பாடு அகவாழ்வில் அமைந்த செய்திகள், மெய்யியலிலும் பரிணாம வளர்ச்சி பெற்றிருப்பதை உணர்ந்து மகிழலாம்.

## ஊழ்க்கோட்பாடு

கணவன், மனைவி உறவை 'மாந்த முயற்சியில்' உருவானது என்று கூறுவதிலும், 'ஊழின் தீர்ப்பு' என்று கூறுவது, இவ்வுறவை இன்னும் வலியுடைத்தாக்கும் என்ற கருத்து, தமிழரிடையே நிலவியதை, தமிழிலக்கிய ஆசிரியர்கள், காதலும், களவுக்கால இயற்கைப் புணர்வும், 'ஊழால் தோன்றின' என்று குறுந்தொகைப் பாடல் ஒன்று காட்டி ஆய்வாளர் விளக்கம் செய்வார். அப்பாடல்,

***'நல்லை மன்றம்ம பாலே மெல்லியற்***
***துணை மலர்ப்பிணையலன்ன விவல்***
***மணமகிழ் இயற்கை காட்டி யோயே'*** என்ற பாடலில் இருவரை இல்லறப்படுத்திய, ஊழினை வாழ்த்துவர். மாற்றோ விலக்கோ கொள்ளுதற்கரியது. இல்லற வாழ்வு என்பதற்கு ஊழ்க்கோட்பாடு பெரிதும் உதவியுள்ளது. வேத மெய்யியலில் இத்தகைய ஊழ்க்கோட்பாடு காணப்பெறவில்லை என்பது கட்டுரை ஆசிரியர் கருத்து.

## தமிழ்நெறியில் ஊழ்க்கோட்பாடு

தமிழ் நெறியாகிய சைவ நெறியில், ஊழ் முக்கிய இடம் பெறுகிறது. திருஞானசம்பந்தர், சமண பௌத்த மதத்தவர்கள், அம்மதங்களைச் சார்ந்து சைவ நெறியைப் புறக்கணித்து இகழ்வதை, அறிவிலாமையால் மட்டுமன்று; **விதியில்லாமையால், "சைவப்பெருமை அறிய கூட்டுவிக்கவில்லை"** என்று அருளியிருக்கின்றார்.

**'விதியிலாதார் வெஞ்சமணர் சாக்கியர் என்றிவர்கள்**
**மதிஇலாதார் என் செய்வாரோ வலிவலம் மேயவனே'** என்ற தேவாரஅடியில் கட்டுரை ஆசிரியர் கருதும் ஊழ்க்கோட்பாடு பொலிவதைக் காணலாம். இதுவும் உள்ளது சிறத்தலாகும். (Evolution)

## வினைக்கோட்பாடு

வேதங்களில் காணப் பெறாத 'வினைக்கோட்பாடு', வினையடிகளிற் பிறவி நிகழும் என்ற கோட்பாடு 'திராவிடப் பண்பாடு கொடுத்த நன்கொடை', என்று ஐரோப்பியர் 'ஏ.எல்.பாஷம்' கூறியிருப்பதைக் கட்டுரையாசிரியர் மேற்கோள் காட்டுவார். வினையடிப்படையில் பிறவிகள் நிகழும் என்ற கோட்பாடு இராமாயண, மகாபாரத, உபநிடதங்களில் காணப்பெறுகிறது என்று தெளிவதற்குத் திராவிடப் பண்பாட்டின் கூட்டுறவே காரணம் என்று தருமையாதீன முதற்குருமூர்த்திகள் இக்கருத்தைத் தெளிவாக அருளியிருக்கின்றார்.

**'அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்**
**அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்**
**எவர் எவர்க்கு உதவினர் எவர் எவர்க்கு உதவிலர்**
**தவரவர் நினைவது தம்மை உணர்வதுவே',**

இப்பாடல் வினைக்கோட்டிற்கு, நல்ல எடுத்துக்காட்டாகும். இந்த வினைக் கோட்பாட்டை, இந்தியச் சமயங்கள் பலவும் தத்தம் கோட்பாடு போல் பேணிக்கொண்டன. இந்த ஆழமான மெய்யியற் கோட்பாட்டிலிருந்துதான் இந்தியத் தத்துவ வளர்ச்சியே உருக்கொண்டிருக்கிறது என்பது ஆய்வாளர் கருத்து.

## துறக்கம் நரகம் பற்றி

வேத மெய்யியல் கற்பித்த 'துறக்கம்', 'நரகம்' பற்றிய கோட்பாட்டைப் பழந்தமிழ்ப்புலவர்கள் நன்கு அறிந்திருந்தனர் என்றும் நல்வினைகளை, குறிப்பாக, ஈகை, கொடைச்செயல்களைப் புரிவதன் மூலம், மேலுலகம் செல்லலாம் என்று பாடியுள்ளனர் என்றும், ஈகை, மறமாண்புச் செயல்களால் துறக்க உலகம் புகலாம் என்ற கருத்து வேதநூல்களில் காணப்படவில்லை என்றும் முடிவு கூறுவார் ஆசிரியர். 'துறக்கம்', 'உலகம்' குறித்து வேதநூல்கள் கொண்டிருந்த கருத்தைத் தமிழ் நூலார் ஏற்கவில்லை; மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று என்பர் திருவள்ளுவர். அறவினையைச் சடங்காகச் செய்யக்கூடாது; மேலுலகம் கருதி இயற்றலும் கூடாது: அதனை மாந்தர்தம் கடமையாகச் செய்தல் வேண்டும் என்று கோப்பெருஞ்சோழனின் புறநானூற்றுப்பாடல் ஒன்று கொண்டு ஆய்வாளர் விளக்கம் நல்குவது அறிய வேண்டுவதாம்.

## புறநானூறு நல்கும் கோட்பாடு

**'செய்குவம் சொல்லோ நல்வினையெனவே**
**ஐயம் அறாஅர் கசடு ஈண்டு காட்சி**
**நீங்கா நெஞ்சத்துத் துணிவில்லோரே**
**யானை வேட்டுவன் யானையும் பெறுமே**
**குறும்பூழ் வேட்டுவன் வறுங்கையும் வருமே' -**

என்ற கோப்பெருஞ்சோழனின் பாடலில், வைதீகரின் மெய்யியற் கோட்பாடு

கூறப்படுகிறது. மனவழுக்கு உடையவரல்லவா நல்வினை இயற்றித் துறக்கம் சேர எண்ணிக் கவலைப்படுவர். உயர்ந்த குறிக்கோளினர்க்கு யாவதும் கூடும் எனக் கூறுகின்றான் சோழன். நல்வினை செய்தால் துறக்கம் செல்லலாம் என்பது ஒரு கோட்பாடு; இதனை உரைத்த சோழன், அடுத்த கோட்பாட்டைக் கூறுகிறான்.

**'செய்வினை மருங்கின் எய்தலுண்டெனின்**
**தொய்யா உலகத்து நுகர்ச்சியும் கூடும்**
**தொய்யா உலகத்து நுகர்ச்சி இல்லெனின்**
**மாறிப் பிறப்பின்மையும் கூடும்'**

இப்பாடல் அடிகளில், 'நல்வினைகளை இயற்ற, 'பிறவியே இன்மையாய்ப் போகும் நிலையும் கிட்டுமே' என்கிறான் சோழன். வினைகேற்பப் பிறப்பு, வினையொடுங்கப் பிறப்பிறப்பற்ற நிலை ஆகிய திராவிட மெய்யியற் கோட்பாட்டை ஈண்டுச் சோழன் எடுத்துரைப்பான். 'செய்வினை' என்ற சொல், செய்தொழில் என்ற பான்மையில் அல்லாது, நல்வினை தீவினை என்ற பொருளில் சமயஞ் சார்ந்த மெய்யியலுக்கு ஈண்டுப் பயன்பெற்றது என்று கருதல் வேண்டும் என்பர் ஆய்வாளர்.

## மூன்றாவது கோட்பாடு

இவ்விரண்டு கோட்பாடுகளுக்கு மேலாக மூன்றாவது கோட்பாடு ஒன்றை அதே சோழன் அருளுகிறான் :

**'மாறிப் பிறவா ராயினும் இமயத்துக்**
**கோடுயர்ந்தன்ன தம்மிசை நட்டுத்**
**தீதில் யாக்கை யொடு மாய்தல்**
**தவத்தலையே**

இதே சோழன், மேற்கண்ட புறப்பாட்டில் நல்வினை செய்வது மேலுலகம் சேர என்றுரைத்தது ஒரு கோட்டுபாடு: அடுத்தடுத்து வரும் பிறவிகளைத் துடைக்க என்றது மற்றொரு கோட்பாடு. இவை இரண்டின் வேறாய்ப் பகுத்தறிவு சார்ந்த வகையில், சங்ககாலப் பண்பாடு உருவாக்கிய மூன்றாவது கோட்பாட்டைக் கோப்பெருஞ்சோழன் மேற்கண்டஅடிகளில் உரைக்கின்றான்.

## கோட்பாட்டு விளக்கம்

'இம்மைச் செய்தன மறுமைக்கு ஆகும்' என்று **அறவிலை நோக்கின்றி எல்லா வகையாலும் அறமியற்றியவன் ஒருவன் தம் புகழை இவ்வுலகில் நிலைபெற நிறுவி இறப்பான்.** அப்புகழ் என்றும் மறையாது. இமயம் போல, அப்புகழுடம்பு நின்று நிலைபெறும். 'பருவுடல் கொண்டு புகழுடல் தேடினன் அவ்வுரவோன்' என்று உலகம் மொழியும். இதுவே சோழன் மெய்யியற்கோள் அறிவுரை. மேலுலகம் வேண்டாம். புகழ் பெறலாம். பிறப்பின்மையும் வேண்டாம். செய்வினை அமைக என்று ஆய்வாளர் கூறுவது. 'வீடும் வேண்டா விறலினார்' என்று சேக்கிழார் இலக்கணம் கூறுவது வழிமொழிதல் என்று கருதலாம்.

**செந்தமிழ் வாசகர்களிடமிருந்து தரமான ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.**

சங்க காலந்தொட்டு, தமிழர்களின் அடையாளமாகவும், பண்பாட்டுக் கருவூலமாகவும் திகழ்ந்து வருகின்ற தமிழ் இலக்கியம் மற்றும் இலக்கணங்கள் புலப்படுத்துகின்ற தமிழர் வாழ்வியல், பண்பாட்டியல், மானிடயியல், வரலாற்றியல், அறிவியல் தொழில் நுட்பவியல், கலைவியல், சிற்பவியல் முதலான பொருண்மைகளில் ஆய்வுக்கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

கட்டுரைகள் ஆய்வுநோக்கில், தரவுகளின் அடிப்படையில், தெளிவான நடையில் அமைவது எதிர்நோக்கப்படுகிறது.

– ஆசிரியர் –

தொடர்பு முகவரி

ஆசிரியர்
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615

பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ், 32, மேலமாசி வீதி, மதுரை – 1**

RNI Regd. No. 5508/57 June 2014 Post Regd. No. MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month

# செந்தமிழ்க் கல்லூரி



## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 & 0452 - 2343707, 6575615

- ✦ இளம் இலக்கியம்
- ✦ இளங்கலை
- ✦ முதுகலை
- ✦ இளம்நிலை ஆய்வாளர்
- ✦ முதுநிலை ஆய்வாளர்
- ✦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**2014–2015ம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது.**

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

**முனைவர் மூ. மீனா**
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

**இரா. குருசாமி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

*From*
**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.